வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu
ஈழநாடு

16.09.2020 புதன்கிழமை

எண்ணெய்க்கசிவு உறுதி

கொழும்பு, செப் 16

கிழக்கு கடற்பரப்பில் எம் ரி நியூ டயமண்ட் எண்ணெய்க்கப்பல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பலிலிருந்து எண்ணெய்க்கசிவு ஏற்பட்டுள்ளமை உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் கலந்திருக்கும் எண்ணெய்க்கு காரணம் கப்பலில் எண்ணெய்க் களஞ்சியத்தில் கசிவு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக மறுப்புக்கு எதிராக ஒன்றிணையும் தமிழர் தரப்பு!

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ள கட்சிகள் வெள்ளிக்கிழமையன்று கூடி இறுதித் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப் 16

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் புதிய அரசின் ஜனநாயக மறுப்புச் செயற்பாடுகளுக்கு எதிராக ஒன் றிணைந்து செயற்படுவதற்கான தீர்மானம் ஒன்றை எடுக்கவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இயங்கும் கட்சிகள் மற்றும் அமைப் புக்களை இணைத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

02

பருத்தித்துறையில் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை!

யாழ்ப்பாணம், செப் 16

பருத்தித்துறை வியாபாரி மூலைப் பகுதியில் நேற்று மாலை கத்திக் குத்துக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந் துள்ளார்.

சம்பவத்தில் கணேசலிங்கம் நடேசலிங்கம் (வயது-39) என்ற அதே பிரதேசத்தை சேர்ந்தவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலை சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தடையை மீறிய சிவாஜி கைதானார்!

யாழ்ப்பாணம், செப் 16

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் நேற்றுக் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

உரும்பிராய் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை நடத்தியவேளை அவர் கைதுசெய்யப்பட்டார்.

நீதிமன்றத் தடை உத்தரவை மீறி நினைவேந்தலை நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்

02

20 இல் அவசரப்படாதீர்!

அரசிடம் கோருகிறார் கரு

கொழும்பு, செப் 16

முன்மொழியப்பட்டுள்ள அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற அவசரம் காண்பிப்பதற்கு எவ்வித நியாயமான காரணங் களும் இல்லை என முன்னாள் சபா நாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து டுவிட்டர்

02

திலீபன் நினைவேந்தலுக்கு தடை

சார்ள்ஸ், செல்வம் உள்ளிட்ட பலருக்கு அழைப்பாணை!

மன்னார், செப் 16

மன்னாரில் தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் நிகழ்வு களை நடத்த தடை விதித்துள்ள மன்னார் நீதிமன்றம், பாராளு மன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட பலருக்கு அழைப் பாணை அனுப்பியுள்ளது.

இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் அமைப்பு தலைவரா கச் செயல்பட்டு மர

02

யாழ்.சந்தைகளில் விவசாயிகளிடம் அறவிடும் கழிவை உடன் நிறுத்துக!

அமைச்சர் மஹிந்தானந்த உத்தரவு

யாழ்ப்பாணம், செப் 16

யாழ். மாவட்ட சந்தைகளில் விவசாயிகளிடம் அறவிடப் படும் 10 வீத கழிவை உடனடி யாக நிறுத்துமாறு விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, வடக்கு மாகாண அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

யாழ். மாவட்ட விவசாயிகள் முகங் கொடுக்கும் பிரச்னை

02

‘20’ நிறைவேறியே தீரும்!

மஹிந்த ராஜபக்ஷ விடாப்பிடி

கொழும்பு, செப் 16

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவை நாடாளுமன்றில் மூன்றிலி ரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றியே தீருவோம் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவு குறித்து ஆராய்வதற்குப்

02

டெனீஸின் நிபந்தனைக்கு இணங்க மறுத்தார் விக்கி!

வழக்கை எதிர்கொள்ளத் தயாராம்

கொழும்பு, செப் 16

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் தேசியக் கூட் டணியின் தலைவருமான சி.வி. விக்னேஸ்வரன் உள்ளிட்ட 04 பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விலக்கிக் கொள்ள டெனீஸ் வரன் தரப்பு விதித்த நிபந் தனைக்கு இணங்க விக்னேஸ் வரன் தரப்பு சட்டத் தரணி மறுத்ததை அடுத்து, வழக்கு

02

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

திலீபனை நினைவு கூருவதற்கு யாழ்நீதிமன்றம் மீண்டும் தடை

யாழ்ப்பாணம், செப் 16

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை நடத்தத் தடை விதித்த உத்தரவை மீளப்பெற முடியாது என்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் கட்டளை வழங்கியது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பு என்ற வகையில் அதன் உறுப்பினரை நினைவு கூருவதற்கு நாட்டின் அரசமைப்புக்கு கட்டுப்பட்டு பிரதிவாதிகளால் செய்யப்பட்ட விண்ணப்பத்தை நிராகரிப்பதாக யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

திலீபனின் நினைவேந்தலுக்கு தடை கோரி யாழ் பொலிஸ் நிலைய பொலிஸார் தாக்கல் செய்த மனுவை ஏற்று யாழ். நீதிமன்றம் தடை விதித்திருந்தது.

இந்த நிலையில், நேற்று திருத்த மனு

சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன், வ.பார்த்தீபன் உள்ளிட்டவர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு சார்பில் சட்டத்தரணிகள் வி.திருக்குமரன், கு.குருபரன் ஆகியோர் முன்னிலையாகினர்.

இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று பிற்பகல் வழங்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கம். திலீபனை நினைவுகூர்வது தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பொன்றின் உறுப்பினரை நினைவுகூர்வதாக அமையும். அதன்மூலம் தடைசெய்யப்பட்ட அமைப்பொன்றை நினைவுகூர்வதாக அமையும். அது, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படக்கூடிய குற்றம். தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பின் உறுப்பினரை நினைவுகூருவதை மன்று தடை செய்கிறது என நீதிபதி தீர்ப்பளித்தார்.

ஜனநாயக...

தியாகி திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்கப்பட்டமை மற்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் கைது செய்யப்பட்டமை உள்ளிட்ட வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக அரசு பொலிஸாரின் ஊடாகச் செயற்படுத்தும் ஜனநாயக மறுப்புச் செயற்பாடுகள் குறித்து நேற்று பிற்பகல் நல்லூர்இளங்கலைஞர் மண்டபத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தது.

இந்தக் கலந்துரையாடலிலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது,

இந்தக் கலந்துரையாடலில் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், சி.சிறீதரன் மற்றும் சீ.வி.கே.சிவஞானம், ஈ.சரவணபவன், பா.கஜதீபன், எஸ்.ஈசன், விந்தன் கனகரட்ணம், எஸ்.வேந்தன், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

யாழ். சந்தைகளில்...

கள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று நேற்று யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில், விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தலைமையில் இடம்பெற்றிருந்தது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகளால் அமைச்சரின் கவனத்திற்கு பல்வேறு பிரச்னைகள் கொண்டுவரப்பட்டன.

அதற்கமைய வடக்கில் குறிப்பாக யாழ். மாவட்டத்திலுள்ள சந்தைகளில் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்டுச் சந்தையில் விற்பனைக்கு வரும் விவசாயப் பொருட்களுக்கு 10 வீத கழிவு அறவிடும் நடைமுறையை நிறுத்துமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

உடனடியாக அந்த கழிவுப் பணம் பெறும் நடவடிக்கையை இடைநிறுத்துமாறு வடக்கு ஆளுநர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரை அமைச்சர் பணித்ததோடு அவ்வாறு நிறுத்தத் தவறினால் பொலிஸாரர் மூலம் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துமாறும் கூறியுள்ளார்.

அத்தோடு இலங்கை முழுவதும் உள்ள கமநல சேவை அமைப்புகளுக்கான களஞ்சியம் அடுத்த வருட பாதீட்டின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்து கட்டித் தரப்படும் எனவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

வடக்கில் கமநல சேவைகள் திணைக்களத்திற்குரிய தலைமை காரியாலய கட்டடத்திற்கு அடுத்த பட்ஜெட் மூலம் நிதி ஒதுக்கீடு செய்வதாகவும், எனினும் மிக விரைவில் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதியை வைத்து புதிய கட்டட வேலைத்திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறும் அமைச்சர் உத்தரவிட்டார்.

இந்தக் கூட்டத்தின் போது விவசாய அமைப்பு பிரதிநிதிகளால் கட்டாக்காலி மாடுகள், கட்டாக்காலி நாய்கள், குரங்கு மற்றும் பன்றிகளின் தொல்லை தொடர்பான பிரச்னைகள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டன.

இது குறித்து கருத்து தெரிவித்த அமைச்சர்,

காட்டு விலங்குகளால் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படுகின்றது. அதற்கு ஓரிரு மாதங்களில் உரிய தீர்வு பெற்றுத் தரப்படும்-என்றார்.

அத்தோடு வடக்கில் நெல் களஞ்சியம் இல்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அதற்கு உடனடியாக யாழ்.மாவட்ட அரச அதிபருடன் தொடர்பு கொண்டு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் உள்ள உணவு களஞ்சியத்தை உடனடியாக நெல் களஞ்சியத்துக்காக பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குமாறு அமைச்சர் உடனடியாக அரச அதிபருக்கு உத்தரவிட்டார்.

டெனீஸின்...

இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகள் மஹிந்த சமயவர்தன மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் வடக்கு மாகாண சபையின் தலைமைச் செயலாளர் அந்தோனிப்பிள்ளை பத்திநாதன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் முன்னாள் செயலாளர் சிவலிங்கம் சத்தியசீலன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

வழக்கின் பிரதிவாதிகளில் ஒருவரான வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் மீதான குற்றச்சாட்டு தமிழ்மொழியில் வாசிக்கப்பட்டது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுகளில் தாம் நிரபராதி என அனந்தி சசிதரன் மன்றுக்கு அறிவித்துள்ளார்.

இதன்போது தங்களின் இரண்டு நிபந்தனைகளுக்கு பிரதிவாதிகள் இணங்கினால் வழக்கை வாபஸ் பெற தயாராகவுள்ளதாக மனுதாரரான ப.டெனீஸ்வரன் சார்பில் மன்றில் ஆஜராகிய சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தனது சேவை பெறுநரை முறையற்ற வகையில் அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கியமை தொடர்பில் சி.வி. விக்னேஸ்வரன் மன்னிப்பு கோரவேண்டும் எனவும், டெனீஸ்வரனை மீண்டும் அமைச்சுப் பதவியில் அமர்த்துமாறும் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை வாபஸ் பெறவேண்டும் எனவும் மனுதாரர்கள் நிபந்தனை முன்வைத்துள்ளனர்.

இந்த இரண்டு நிபந்தனைகளுக்கும் பிரதிவாதிகள் இணங்கினால் தங்களின் மனுவை வாபஸ் பெற தயாராக உள்ளதாகவும் மனுதாரர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

எனினும், எவ்வித நிபந்தனைகளுக்கும் இணங்க தமது தரப்பு தயார் இல்லை எனவும் வழக்கை எதிர்கொள்ளத் தயாராகவுள்ளதாகவும் சி.வி. விக்னேஸ்வரன் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கே. கனகேஸ்வரன் மன்றில் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, இந்த வழக்கின் சாட்சி விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுக்க நீதிபதிகள் குழாம் தீர்மானித்துள்ளது.

இந்த வழக்கின் மேலதிக சாட்சி விசாரணைகள் இன்று பிற்பகல் இடம்பெறவுள்ளன.

சாள்ஸ், செல்வம்...

ணித்த ராசையா பார்த்தீபன் அல்லது திலீபனின் நினைவு நாளை நினைவு கூருவதற்கு மன்னார் நீதவான் நீதி மன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை தடை விதித்தது.

மன்னார் நீதிமன்ற அதிகார எல்லைக்குள் தியாகி திலீபனின் நினைவஞ்சலி நிகழ்வை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் கிடைக்கப் பெற்ற புலனாய்வு தகவல்களுக்கு அமைவாக தடை செய்யப்பட்ட அமைப்பான விடுதலைப் புலிகளை மீள் எழுச்சி செய்யும் நோக்கில் நித்திலம் பதிப்பகத்தின் உரிமையாளர் வி.எஸ். சிவகரன், மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், மன்னார் நகரசபை உப தவிசாளார் செபஸ்டியன் ஜான்சன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஊடாக ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்து மன்னார் நீதிமன்றத்தின் கவனத்துக்குகொண்டு செல்லப்பட்ட நிலையில் இந்தத் தடை உத்தரவு விதிக்கப்பட்டது.

அதேவேளை, நினைவஞ்சலி நிகழ்வு நடத்துவதால் அந்த வீதியில் வாகன நெரிசல் ஏற்படும் என்பதுடன் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளும் மக்களுக்கு கிளர்ச்சி பற்றிய எண்ணங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழலுக்கும் இவை பங்கம் ஏற்படுத்தும் என்பதாலும் நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி வரையான கலப்பகுதியில் மன்னார் நீதவான் நீதிமன்ற அதிகார எல்லைக்குள் நினைவேந்தல் நிகழ்வு நடத்துவதற்கு உடனடித் தடை உத்தரவு பிறப்பிக்கப்படுள்ளது.

அத்துடன் வி.எஸ். சிவகரன் மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், மன்னார் நகரசபை உப தவிசாளார் செபஸ்டியன் ஜான்சன், வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரை எதிர் வரும் 28 ஆம் திகதி காலை 09 மணியளவில் மன்னார் நீதவான் நீதி மன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

20 இல்...

பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், 20 ஆவது திருத்தம் குறித்து ஆராய்வதற்காகப் பிரதமரால் நியமிக்கப்பட்ட மீளாய்வுக்குழு மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

அந்தப் பதிவில்,

"முன்மொழியப்பட்ட வெள்ளைக் காகிதமாக உள்ள அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பில் ஆராய்வதற்காக பிரதமரினால் நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழு மேலும் விரிவுபடுத்தப்படவேண்டும்.

20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக்கொள்ள அவசரப்படுவதற்கு எவ்வித நியாயமான காரணங்களும் இல்லை.

நாடொன்று சமத்துவம் மற்றும் சுபீட்சம் ஆகியவற்றை நோக்கிப் பயணப்படுவதை உறுதிசெய்வதற்கு ஜனநாயகக் கட்டமைப்புக்கள் மிகவும் அவசியமானவையாகும்" என பதிவிட்டுள்ளார்.

தடையை மீறிய...

என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் வாரம் நேற்று ஆரம்பாகியுள்ள நிலையில், அந்த நிகழ்வை நடத்த நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவில் யாழ். நீதிவான் நீதிமன்றில் தடையுத்தரவைப் பொலிஸார் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

'20' நிறைவேறியே...

பிரதமர் மஹிந்த சிறப்புக் குழுவொன்றை அமைத்துள்ளமை முன்வைக்கப்பட்டுள்ள வரைவில் என்ன உள்ளது என்பது பிரதமருக்கே தெரியாது என்பதை வெளிப்படுத்தியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்திருந்தது. இந்தநிலையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவின் உள்ளடக்கம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்று எதிரணியினர் கூறுவது அவர்களுக்குத்தான் வெட்கக்கேடு. இது அவர்களின் சிறுபிள்ளைத்தனத்தை எடுத்துக்காட்டுகின்றது.

20ஆவது திருத்தத்தில் உள்ள ஒரு சில விடயங்கள் குறித்து மீளாய்வு செய்யுமாறு ஆளுந்தரப்பிலுள்ள ஒரு சிலர் என்னிடம் கேட்டுக்கொண்டனர். அதற்கமையவே அது தொடர்பில் ஆராயவே அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் 9 பேர் கொண்ட சிறப்புக் குழுவை நியமித்துள்ளேன்.

அவர்கள் குறித்த விடயங்களை ஆராய்ந்து அது தொடர்பான அறிக்கையை என்னிடம் கையளித்த பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கையை எடுப்பேன்.

"20" தொடர்பில் அரசுக்குள் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்தே சிறப்புக் குழுவை நான் நியமித்துள்ளேன் எனவும் எதிரணியினர் ஊடகங்களுக்குக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். அந்தக் கருத்துக்களையும் நான் அடியோடு நிராகரிக்கின்றேன்.

20ஆவது திருத்தச் சட்ட வரைவை நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றியே தீருவோம்-என்றார்.

ஈழநாடு
Eelanadu
16.08.2020 புதன்கிழமை
சார்வரி, ஆவணி 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

தியாக தீபம் திலீபன் தமிழர் தேசத்தின் ஸ்ரீராமுலு

ஒவ்வோர் ஆண்டும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களால் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டு வருகின்றது. ஆனால், இம்முறை அதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டிருக் கின்றது. இதன் மூலம் தமிழ் மக்களின் நினைவு கூர்தலுக்கான உரிமை கேள்விக்குள்ளாகியிருக்கின்றது. இதன் மூலம் புதிய அரசாங்கம் எதிர் காலத்தில் நினைவு கூர்தல் தொடர்பான விடயங்களை எவ்வாறு கையாளப் போகின்றது என்பதையும் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றது.

உலகெங்கும் மக்களால் பலர் நினைவு கூரப்படுகின்றனர். அது அவர் களின் உரிமையாகும். அண்மையில் பாதுகாப்புச் செயலாளர் கமால் குண ரத்ன, திலீபன் தொடர்பில் தனது அபிப்பிராயத்தை தெரிவித்திருந்தார். இதற்குப் பலரும் கண்டனங்களை தெரிவித்திருந்தனர். ஒரு சமூகத்தில் உயர்வாக மதிக்கப்படும் ஒருவர், பிறிதொரு சமூகத்தினால் தூற்றப் படலாம் அல்லது நிராகரிக்கப்படலாம். அதேவேளை ஒரு காலத்தில் பயங்கர வாதியென்று அழைக்கப்பட்டவர்கள் பிறிதொரு காலத்தில் விடுதலை வீரர்களான கதைகளும் ஏராளம். பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் தேசத் துராகிகளாகவும் பயங்கரவாதிகளாகவும் பட்டியலிடப்பட்ட சிலரை இலங்கை அரசாங்கம் விடுதலை வீரர்களாக அறிவித்திருக்கின்றது. இப்படி பலதை கூறமுடியும். உலகெங்கும் இந்த நிலைமையுண்டு.

உதாரணமாக, அநகாரிக தர்மபால சிங்கள மக்கள் மத்தியில் போற் றப்படும் ஒருவர். அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், தமிழ் மக்கள் மத்தியில் ஆறுமுக நாவலருக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் அநகாரிக தர்மபாலவிற்கு இல்லை. இதுதான் சமூக யதார்த்தம். இந்த சமூக யதார்த்தத்தை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் அரசாங்கம் என்பது அனைத்து மக்களையும் சமமாக நோக்க வேண்டிய பொறுப்புடையது. அந்தப் பொறுப்பிலிருந்து அரசாங்கம் விலகும் போது தான், அரசாங்கத்திற்கும் குறித்த மக்கள் கூட்டத்திற்கும் இடையில் விரி சல்களும் முரண்பாடுகளும் ஏற்படுகின்றன.

திலீபன் - இந்திய அமைதிப்படைகள் இலங்கையில் நிலைகொண்டி ருந்த காலத்தில், ஓர் இலட்சியத்திற்கான அறவழிப் போராட்டத்தில் தன் உயிரை ஆகுதியாக்கியவர். விடுதலைப் புலிகளின் உறுப்பினராக இருந்தாலும் கூட, அறிவழியிலான போராட்டத்தின் குறியீடாகவே அவர் தமிழ் மக்கள் மத்தியில் பார்க்கப்படுன்றார். தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த ஒருவராக அவர் மட்டுமே இருக்கின்றார். அந்த வகையில் திலீபன் தமிழர் தேசத்தின் ஒரு பொட்டி ஸ்ரீராமுலு (Potti Sreeramulu) போன்றவர். ஸ்ரீராமுலு ஆந்திர மாநில கோரிக்கையை முன்வைத்து, உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்தவர். அவரது மரணத்தை தொடர்ந்து ஏற்பட்ட கிளர்ச்சி முழு இந்தியாவையும் பாதித்தது. இதனைத் தொடர்ந்து இந்திய அரசாங்கம் ஆந்திராவை அங்கீகரித்தது. இன்றும் ஆந்திர மக்களின் மனங்களில் ஸ்ரீராமுலு வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அதேபோன்றுதான் தியாக தீபம் திலீபனும் தமிழ் மக்களின் மனங்களில் வாழ்கின்றார். அவரை நினைவு கூர்வதற் கான உரிமையை ஆட்சியாளர்கள் மறுத்தாலும்கூட, தமிழ் மக்களின் மனங்களிலிருந்து அவரை அகற்றிவிட முடியாது. இதனை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆட்சியாளர்கள் இவ்வாறான நினைவுகூர்தலை தேசிய பாதுகாப்பு டன் இணைத்துக் குழம்புகின்றனர். உண்மையில் இவ்வாறான நினைவுகூர்த லால் தேசிய பாதுகாப்பிற்கு எந்த இடையூறும் ஏற்பட்டுவிடப் போவ தில்லை. அதேவேளை தமிழ்த் தேசிய பரப்பிலும் இது போன்ற விடயங் களில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு முடிவுகளை எடுக்க வேண் டும். திலீபனின் நினைவுகூரல் மட்டுமல்ல, எந்தவொரு நினைவு கூர்தல் களையும் கட்சி மயப்படுத்தக்கூடாது. விடயங்கள் கட்சி மயப்படுத்தப் படும்போது இவ்வாறான தடைகளை ஏற்படுத்துவதும் இலகுவாகி விடலாம். இதனைக் கருத்தில் கொண்டு இதுபோன்ற தேசத்திற்கான நினைவுகூர்தல்களை தேசமாக எவ்வாறு முன்னெடுக்கலாம் என்றே கட்சிகள் ஆராய வேண்டும். ஒரு விடயத்திற்கு நீதிமன்றம் தடைவிதித்த பின்னர் அங்கு சென்று ஆர்ப்பாட்டம் செய்வதும், கைது செய்யப்படுவோம் என்று தெரிந்தும் ஒன்றை செய்வதும் கட்சி அரசியல் ஆதாயங்களுக்கே பயன்படும். ஒருவேளை அவ்வாறான தெரிவை மேற்கொள்வதாயின் அனைத்து கட்சிகளின் தலைவர்களும் ஒரே நாளில் கைது செய்யப்பட வேண்டும். அது ஒரு செய்தியை கூறலாம்.

கீரிமலையில் எம்.எஸ்.சுப்புலக்ஷ்மி அம்மா!

இன்று அவரது 104ஆவது அகவை

— அலசுவது இராஜதந்திரி

இசையரசி எம்.எஸ்.சுப்புலக்ஷ்மி அம்மா அவர்களின் 104 வது பிறந்ததினம் இன்றாகும்.

1916 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஃதிகதி மதுரையில் பிறந்தவரே மதுரை சண்முகவடிவு சுப்புலக்ஷ்மி. பின்னாளில் எம்.எஸ் சுப்புலக்ஷ்மி எனவும், எம்.எஸ் அம்மா எனவும் கர்நாடக இசை உலகில் தமக்கென ஒரு முத்திரை பதித்தவரே இந்த இசை மேதை.

அறுபதுகளின் ஆரம்ப பகுதியில் எம்.எஸ். சுப்புலக்ஷ்மி இலங்கைக்கு விஜயம் செய்து யாழ்ப்பாணத்துக்கும் வந்திருந்தார்.

இன்றிருப்பதுபோல அன்று இசை நிகழ்வுகளை நடத்தக்கூடிய மண்டபங்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை.

யாழ்ப்பாணம் மனோகரா தியேட்டர் அரங்கே அப்போது கலைஞர்கள் மத்தியில் பிரபலமாக இருந்தது. இந்த அரங்கிலேயே எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களுடைய கர்நாடக இசைக்கச்சேரி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருந்தது.

அன்றைய யாழ்ப்பாணம் இசைவடிவ மாகவே காட்சியளித்த காலமாகும். இந்திய-இலங்கை கலைஞர்கள் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் இசை விருந்தளித்தனர்.

இந்திய கலைஞர்களின் யாழ்ப்பாண விஜயம் ஒரு வரப்பிரசாதமாகவே நோக்கப்பட்டிருந்த காலமாகவே அன்று காணப்பட்டது.

எனவே எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அம்மா அவர்களுடைய கர்நாடக இசைக்கச்சேரியும் அன்று மிகப்பிரமாதமாகவே மனோகரா தியேட்டர் அரங்கில் களை கட்டியிருந்தது.

அவரது இசை நிகழ்ச்சி இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை யாழ்ப்பாணத்தில் பெரும் மழைபொழிவும் காணப்பட்டிருந்தது.

அப்போது எம்.எஸ். அம்மாவின் கானமழைக்கு ஆசீர்வாதமாக வர்ணபகவானும் மழைபொழிகின்றான் என ரசிகர்கள் மகிழ்ந்தனர்.

எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அம்மாவின் யாழ்ப்பாண விஜயத்தின் போது கீரிமலை புனித தீர்த்த தடாகப்பகுதிக்கும் அவரை அழைத்துச் சென்றனர் அவரது ரசிகர்கள்.

அங்கே பெண்களுக்குரிய கேணியில் நீராடிவிட்டு வெளியேவந்து எம்.எஸ்.அம்மா தனது தலைக்கூந்தலை உலர்த்தியவராக எதிரே காணப்பட்ட வங்காள விரிகுடா கடலின் அழகை ஒரு கல்லின் மீது அமர்ந்து பார்த்து ரசித்துக்கொண்டிருந்தாராம்.

அப்போது எம்.எஸ். அம்மாவின் வருகையை அறிந்த அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் சிலர் அவரிடம் வந்து 'அம்மா நாம் செய்த பாக்கியமே நீங்கள் இங்கே வந்திருப்பது. எமக்காக ஒரு பாடலாவது பாடுங்கள்' எனக்கேட்டார்களாம்.

அப்போது மிக வாஞ்சையோடு பணிவாக இசையரசி எம்.எஸ். அம்மா தாம் பாடி நடித்த திரைப்படமான 'மீரா' விலிருந்து காற்றினிலே வரும் கீதம் என்ற பாடலைப்பாடி அங்கு நின்றவர்களை மகிழ்வித்தார்.

எம்.எஸ். அம்மாவை அவரது இறதி நாட்களில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் ஒரு தடவை சென்னையில் சந்தித்திருந்தார்.

இச்சந்திப்பின் ஞாபகார்த்தமாக எம்.எஸ் அம்மாவிடம் எதையாவது தரும்படி கம்பவாரிதி இ . ஜெயராஜ் கேட்டிருந்தார்.

அப்போது தனது கையில் வைத்திருந்த ஓலை விசிறியை அவருக்கு அன்பளிப்பாக எம்.எஸ். அம்மா வழங்கியிருந்தார்.

அந்த விசிறியை இன்றும்கூட கொழும்பு கம்பர் விழா இசை அரங்கில் கம்பவாரிதி இ. ஜெயராஜ் நல்லமுறையில் காட்சிப்படுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு எம்.எஸ். அம்மாவை புகழ்ந்த விதமே தனித்துவமானது.

ஓர் இசையரசிக்கு முன்பாக நான் வெறுமனே ஒரு பிரதம மந்திரியே என நேருஜி கூறியிருந்தார் .

2004 ம் ஆண்டு டிசம்பர் 16 ஆம் திகதி 88ஆவது வயதில் இசையரசி எம்.எஸ் சுப்புலக்ஷ்மி அம்மா தனது இவ்வுலக வாழ்வை நீத்தார்.

அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செய்திகள்

‘பிளாஸ்ரிக் அற்ற சுற்றாடலை நோக்கி’ யாழ். பல்கலையில் நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், செப் 16

யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் சமூகத்தினால் “பிளாஸ்ரிக் அற்ற சுற்றாடலை நோக்கி” என்ற செயற்றிட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. கொக்கோ-கோலா நிறுவனத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படவுள்ள இந்தச் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு யாழ். பல்கலைக்கழக இராசயனவியல் துறையின் தலைவர் கலாநிதி பி.ஐங்கரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் வி.காண்டீபன், விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு.ரவிராஜன் மற்றும் விரிவுரையாளர்கள், அலுவலர்கள், ஊழியர்கள், மாணவர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தச் செயற்றிட்டத்தின் கீழ், பல்கலைக்கழகச் சுற்றாடலில் சேரும்பிளாஸ்ரிக் பொருள்களைச் சேகரிப்பதற்கான கொள்கலன்கள் ஆங்காங்கே நிறுவப்படவுள்ளதுடன், அவற்றில்சேரும் பிளாஸ்ரிக் கழிவுப் பொருள்களைக் கிரமமாக அகற்றுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

மாணவனை தாக்கிய அதிபருக்கு 2 வருட கடூழிய சிறைத்தண்டனை!

கொழும்பு, செப் 16

மாணவனை தாக்கிய பாடசாலை அதிபருக்கு இரண்டு ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது,

2013 ஆம் ஆண்டில் 12 வயதுச் சிறுவனை அதிபர் கொடூரமாக தாக்கினார் எனச் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறைப்பாடொன்று வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு கொழும்பைச் சேர்ந்த 52 வயதான சந்தேக நபரான அதிபர் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து சந்தேக நபருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டது. அவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து கொழும்பு உயர் நீதிமன்றம் அதிபருக்கு இரண்டு ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது. அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு இழப்பீடாக ரூபா 25 ஆயிரம் வழங்குமாறும் அதிபருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொள்ளைகள், திருட்டுகளுடன் தொடர்புடைய மூவர் சிக்கினர்!

கிளிநொச்சி, செப் 16

கிளிநொச்சியில் பல்வேறு கொள்ளை-திருட்டுச் சம்பங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மூவர் பொலிஸாரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 5 லட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான தங்க நகைகள் உள்ளிட்ட கொள்ளையிட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரம் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர்கள் மூவரும் 20 வயதுக்குட்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொறியியலாளர் ஒருவரின் வீடு உள்ளிட்ட 5 இடங்களில் இடம்பெற்ற கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களுடன் சந்தேக நபர்களுக்கு தொடர்பு உள்ளது என்றும் பொலிஸார் கூறினர்.

தலைமையை கைப்பற்றுவதே அடுத்த இலக்கு!

கூறுகின்றார் ருவான்

கொழும்பு, செப்.16

தனது அடுத்த இலக்கு கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றுவதே என ஐ.தே.கவின் பிரதித் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்களை மீண்டும் எம்முடன் இணைந்து கட்சியைப் பலப்படுத்த நாம் சகலரும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுப்போம். அனைத்து உறுப்பினர்களும் எனக்கு சகல ஒத்துழைப்புகளையும் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உண்டு.

எனவே வெகு விரைவில் கட்சியை மறுசீரமைத்து புதிய மாற்றங்களை செய்து மீண்டும் மக்களைச் சந்திப்போம். சகல தேர்தல்களிலும் நாம் மீண்டும் எமக்கான இடத்தைத் தக்க வைப்போம்.

கட்சியின் யாப்புக்கு அமைய எவ்வாறு நகரவேண்டுமோ அதனை நான் செய்வேன். அடுத்ததாக தலைமைத்துவ மாற்றம் நிச்சயமாக இடம் பெறும். அதில் நானும் தலைமைத்துவப் போட்டியில் இருப்பேன். ஐக்கிய தேசியக் கட்சி இளம் தலைமைத்துவத்துடன் செயற்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு-என்றார்.

மீனவர்களுக்கு ஐஸ் பெட்டிகள் வழங்கினார் அமைச்சர் டக்ளஸ்!

யாழ்ப்பாணம், செப் 16

யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர்கள் மீன்களைக் குறிப்பிட்டளவு நேரத்துக்கு பழுதடையாமல் பாதுகாப்பதற்கு வசதியாக ஐஸ் பெட்டிகள் வழங்கப்பட்டன.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலின் அடிப்படையில் கடற்றொழில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஐஸ் பெட்டிகளை வழங்கும் முதற்கட்ட நிகழ்வு நேற்று முன் தினம் யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தில் இடம் பெற்றது

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு சுமார் 65 ஐஸ் பெட்டிகளை தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கினார்.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மீனவர் சங்கங்களில் இருந்தும் முதற் கட்டப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் பெருமளவான கடற்றொழிலாளர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் குறித்து அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழிலாளர்களின் பிரச்னைகள் தொடர்பாக மாவட்ட உதவி பணிப்பாளருடன் கலந்துரையாடி மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து செயற்படுத்தப்படும் என்று உறுதியளித்தார்.

வவுனியா விபத்தில் ஒருவர் படுகாயம்!

வவுனியா, செப் 16

வவுனியா ஈரட்டை நவகம பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மதவாச்சியிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த டிப்பர் வாகனம் எதிரே வருகை தந்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் டிப்பர் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பாக ஈரட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

திலீபன் எம்.பிக்கு எதிராக நேற்று ஆச்சிபுரம் மக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, செப் 16

வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கு. திலீபன் பிதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்கு எதிராக ஆச்சிபுரம் கிராமத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆச்சிபுரம் கிராமத்தைச் சேர்ந்த பெண்கள், இளைஞர்கள், வயோதிபர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் தமது கிராமம் போதைப்பொருள் பாவனை உள்ள கிராமம் எனத் தெரிவித்தமையைக் கண்டித்தே மக்கள் போராட்டம் நடத்தினர்.

இதேவேளை, "ஏழை எங்களை இழிவாக்காதீர்கள், மக்கள் பிரதிநிதிகளே மன்னிப்பு கேள், மன்னிப்பு கேள் ஆச்சிபுரம் மக்களிடம் மன்னிப்பு கேள், வாக்களித்தது எம்மைக் கேவலப்படுத்தவா, உங்கள் அரசியலுக்கு எங்கள் கிராமம் என்ன பகடைக்காயா, உங்கள் கட்சியின் பழைய வரலாறு மறந்தீர்களா?" போன்ற பதாதைகளை தாங்கியவாறு சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆச்சிபுரம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் சுமார் ஒரு மணி நேரத்தையும் கடந்து இடம்பெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் தமது கிராம மக்களிடம் மன்னிப்பு கேட்காவிட்டால் போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

பாராளுமன்றத்துக்கு வருகின்றார் ரணில்?

செப்.22 இல் சத்தியப்பிரமாணம்

கொழும்பு, செப் 16

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படவுள்ளார் என சிறிகொத்தா வட்டாரங்களில் இருந்து அறியமுடிந்தது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இவ்வாரம் வெளியாகும் எனவும், எதிர்வரும் 22 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினராக ரணில் விக்கிரமசிங்க சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார் எனவும் அறியமுடிகின்றது.

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி படுதோல்வியடைந்திருந்தாலும் அந்தக் கட்சிக்கு தேசியப்பட்டியல் ஊடாக ஓர் ஆசனம் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, நவீன் திஸாநாயக்க, ஜோன் அமரதுங்க ஆகிய இருவரில் ஒருவரை பாராளுமன்றம் அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளதால் இறுதி நேரத்தில் முடிவுகள் மாறக் கூடிய சாத்தியமும் இருக்கின்றது.

போதைப்பொருள் கடத்தல்காரர்களின் சொத்துகள் அரசுடைமையாக்கப்படும்

விரைவில் வருகின்றது சட்டத் திருத்தம்

போதைப்பொருள் கடத்தல் காரர்களின் சொத்துக்களை அரசுடைமையாக்குவது தொடர்பாக ஆராயுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை மாலை இடம்பெற்ற கலந்துரையாடலின்போது பிரதமர் இந்த ஆசேனையை வழங்கியுள்ளார் எனப் பிரதமரின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல் காரர்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஏனையவர்களுக்கு கைமாற்றுவதற்கும் விற்பனை செய்யவும் தடை விதிக்கத் தேவையான உரிய வேலைத் திட்டங்களை தயாரிக்குமாறும் பிரதமர் ஆலோசனை கூறியுள்ளார்.

இதற்கு தேவையான நீதிமன்றக் கட்டளையை விரைவில் பெற்று இந்த செயற்பாடுகளை விளைத் திறனுடன் மேற்கொள்ளவேண்டும் எனவும் சொத்துக்களை அரசுடைமையாக்குவதற்கு தேவையான சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் எனின் அதற்கு தேவையான நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறும் பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, போதைப் பொருள் கடத்தல்காரர்களின் அரசுடைமையாக்கப்படவுள்ள சொத்துக்களில் 749 மில்லியன் ரூபா பெறுமதியான காணியும் அவர்களுக்குச்சொந்தமான 89 வாகனங்களும் காணப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சந்தேக நபர்களுக்கு சொந்தமான 11 பில்லியன் ரூபா நிதியும் காணப்படுவதாக பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தடைகளை தாண்டி முல்லைத்தீவு மக்கள் மந்துவிலில் படுகொலை நினைவேந்தல்

முல்லைத்தீவு, செப் 16

மந்துவில் பகுதியில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலில் கொல்லப்பட்ட 24 உறவுகளின் 21 ஆம் ஆண்டுநினைவு நிகழ்வு நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பின் இணைப்பாளர் ச.ரூபனின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

உயிர் நீத்த உறவுகளுக்காக மக்கள் அகவணக்கம் செலுத்தி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வை நடத்தக்கூடாதென நேற்று முன் தினம் ஏற்பாட்டாளர்களுக்கு பொலிஸார் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோத மரக்கடத்தலில் ஈடுபடும் குழுக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

கிளிநொச்சி, செப் 16

இயற்கை வளங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் சட்டவிரோத மரக்கடத்தலை மேற்கொண்டு வரும் குழுவினருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு பொது மக்கள் ஒத்துழைக்கவேண்டும் என்று வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்த கோரியுள்ளார்.

வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும் வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களுக்கும் இடையே இடம்பெற்ற மாதாந்த சந்திப்பின்போது வன்னிப்பிராந்தியத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மரக்கடத்தலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக விளக்கமளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இயற்கை வளங்களை அழிக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் சட்டவிரோத மரக்கடத்தலில் ஈடுபடும் குழுவினருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இந்த நடவடிக்கையை மேற்கொள்பவர்களைப் பொதுமக்கள் பொலிஸாருக்கு இனங்காட்ட வேண்டும் அல்லது எமது அவசர அழைப்பு தொலைபேசிக்கு தெரிவித்தால் நாங்கள் அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்வோம் .

இயற்கை அழிவுகளைத் தெளிவுபடுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. பொது மக்களுக்கு இயற்கை தொடர்பான தெளிவை ஏற்படுத்தவேண்டிய நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். மரங்களை அழிப்பதால் எமது நாட்டுக்கு ஏற்படும் அழிவுகளைப் பொது மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

தமது பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத மரக்கடத்லை முறியடிக்க பொதுமக்கள் எம்முடன் இணைந்து பணியாற்ற வேண்டும். இன்னும் சில தினங்களில் மரக்கடத்தல் மேற்கொள்ளும் குழுவினருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை பொலிஸாரால் முன்னெடுக்கப்படவுள்ளன- என்றார்.

செய்திகள்

மாகாண தேர்தலுக்கு சஜித் அணி ஆயத்தம்

புதியவர்களை களமிறக்க முடிவு

கொழும்பு, செப் 16

மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கான பூர்வாங்க நட வடிக்கைகளை ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பித்துள்ளது என அதன் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மாகாண சபைத் தேர்தல் நடத்தப் படும் என அரச தரப்பில் அறிவிக்கப் பட்டுள்ளது. எந்த முறைமை யின் கீழ் அது நடைபெறும் என தெரிய வில்லை. ஆனாலும் தேர்தலொன்று நடத்தப்படுமானால் அதனை எதிர்கொள்வதற்கு எமது கட்சி தயாராகவே இருக்கின்றது.

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட விரும்பும் புதிய அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் ஆகி யோரிடமிருந்து இந்த வாரம் முதல் விண்ணப்பங்களைக் கோரவுள்ளோம்.

அத்துடன் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு சபைக்கு வரமுடியா மல்போன தொகுதி அமைப் பாளர்களையும் தேர்தலில் களமிறங்கு மாறு தலைவர் சஜித் பிரேமதாஸ கோரியுள்ளார். எனவே, பலமான அணியொன்று களமிறக்கப்படும்.

ஐக்கிய மக்கள் சக்தியை கீழ் மட்டத்தில் இருந்து கட்டியெழுப்பும் பணி 18 ஆம் திகதியில் இருந்து ஆரம்பமாகும். கூட்டணியை உருவாக்குவது பற்றியும் விரிவாக ஆராய்ந்து வரு கின்றோம்-என்றார்.

போதைப்பொருள்கள் கடத்தல் பெண்கள் உட்பட 4 பேர் கைது!

மன்னார், செப் 16

உயிலங்குளம் பிரதேசத்தில் போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய குற்றச் சாட்டில் பெண்கள் இருவர் உள்ளிட்ட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து உயிலங் குளம் பகுதியில் நேற்று அதிகாலை மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து 52 கிலோ கேரளக் கஞ்சா மற்றும் 920 கிலோ மஞ் சள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், 5 கோடி ரூபா பணம், லொறி மற்றும் டிராக்டர் ஆகியனவும் பறிமுதல் செய் யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணை களுக்காக மன்னார் பொலிஸ் நிலையத் தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சிங்கள பௌத்த பெயரில் நாட்டை அடையாளப்படுத்துவது தவறானது

மங்கள சமரவீர சுட்டிக்காட்டு

கொழும்பு, செப் 16

நாட்டில் பெரும் பாலான விடயங்க ளைச் சிங்கள பௌத்த பெயரில் அடையாளப்படுத்திக் கொள்வது தவறான விடயமாகும் என முன்னாள் வெளிவிவ காரஅமைச்சர் மங்கள சமரவீர தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-

இலங்கையின் பெரும்பாலான விட யங்களைச் சிங்கள பௌத்த பெயரில் அடையாளப்படுத்து வது முழுமையாகத் தவறான விடயமா- கும்.

இந்தியாவை எடுத்துக் கொண்டால் அங்கு ஹிந்தி மொழியே பெரும்பான்மை மொழியாகும். அதனால் அது ஹிந்தி நாடு என்று யாரும் கூறுவதில்லை. இந்தியாவுக்கு இந் தியா என்றே கூறு கின்றார்கள். அந்த யதார்த்தத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆனால் காவி உடை களை வியாபாரமாகச் செய்கின்ற தேரர்க ளும், பௌத்த மதம் குறித்து தெளிவில் லாத நபர்களுமே இதனை இன்று துரதிஷ்டவசமாக புரிந்து கொள்ளாது இருக்கின்றனர்.

இந்த சில தேரர்களி னாலேயே பௌத்த மதத்தின் தோற்றப் பாடு நாளாந்தம் அழிவடைகின்றது.

அந்தத் தேரர்கள்தான் இன்று பாராளு மன்றத்துக்குச் செல்ல ஒவ்வொருத்தரை அடித்துக் கொண்டு தடுமாறுகின்றார்கள்.

தேரர்கள் தான் நாட்டில் இன மதங்க ளுக்கு எதிராக பாகு பாட்டையும் வைராக் கியத்தையும் உண்டு பண்ணுகின்றார்கள்- என்றார்.

சுகாதார ஆலோசனைகளை மக்கள் பின்பற்றவேண்டும்

சுகாதார அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, செப் 16

பொதுமக்கள் தொடர்ந்தும் சுகாதார ஆலோசனைகளை பின்பற்றுவதன் ஊடா கவே, கொரோனா சவாலில் இருந்து முழு மையாக வெற்றியடைய முடியும் எனச் சுகா தார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரி வித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டுக்குள் கொரோனா தொற்று இல்லை. 100 நாட்களுக்கும் மேலாக சமூகத்தொற்று இல்லாமல் நாம் வைரஸை கட்டுப்படுத்தியுள்ளோம்.

இந்த நிலைமையை நாம் தொடர்ந்தும் பேணவேண் டும். இதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசிய மாகிறது. இதற்காக அரசு எனும் வகையில், தொடர்ந் தும் பிரசாரங்களை மேற்கொண்டுதான் வருகிறோம்.

மக்கள் இதனை உணர்ந்து, உரிய சுகாதார நடவ டிக்கைகளை தொடர்ந்தும் பின்பற்றவேண்டும் என நாம் கேட்டுக்கொள்கிறோம்.

சுகாதார ஆலோசனைகளை மக்கள் முற்றாக பின்பற்றினால்தான் இந்த சவாலில் இருந்து எம்மால் வெற்றியடைய முடியும்-என்றார்.

20ஆவது திருத்தம் குறித்து ஆராயும் குழுவின் அறிக்கை மஹிந்தவிடம்

கொழும்பு, செப் 16

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் குறித்து ஆய்வு செய்வ தற்கு நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை நேற்று அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட இந்தக் குழுவின் தலைவராக அமைச்சரவை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நியமிக்கப்பட்டிருந்தார்.

20ஆவது திருத்தம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்ட புதிதாக உள்ளடக்கப்படவேண் டிய மற்றும் திருத்தப்படவேண்டிய விடயங்கள் தொ- டர் பில் இந்தக் குழுவின் உறுப்பினர்கள் பிரதமருக்கு தெளிவுபடுத்தினர்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் குறித்துஆய்வு செய்வ தற்கு பிரதமரினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

அச்செழு திராட்சை அறுவடை விழாவில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே உள்ளிட்ட குழுவினர் நேற்று வடக்கு மாகாணத் துக்கான விஜயமொன்றை மேற்கொண்டார்.

வடக்கு மாகாணத்தில் இருக்கும் விவசாயிகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய் வதற்காகவே அமைச்சர் இங்கு வருகை தந்தார்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அச்செழு பகுதியில் நேற்றுக் காலை திராட்சை அறுவடை விழாவில் அவர் கலந்து கொண்டார்.

அத்தோடு நெற் பயிர்ச் செய்கையை அமைச்சர் ஏர் உழுது, நெல் விதைத்து ஆரம்பித்து வைத்தார்.

இந்த விஜயத்தில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர்களான சஷீந்திர ராஜபக்ஷ, டி.பி. ஹேரத் மற்றும் மொஹான் டி சில்வா, நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாள ரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர் என பலர் கலந்துகொண்டனர்.

மங்களவை 2 மணி நேரம் துருவி எடுத்தது பொலிஸ்

மாத்தறையில் நடந்தது விசாரணை

கொழும்பு, செப் 16

இலங்கை சிங்கள பௌத்த நாடில்லை எனத் தெரிவித்தமை குறித்து முன்னாள் அமைச்சர் மங்கள சமர வீரவைப் பொலிஸார் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

மாத்தறையில் சுமார் இரண்டு மணிநேரம் மங்கள சமரவீரவை அவரது கருத்துக் குறித்து பொலி ஸார் விசார ணைக்குட்படுத்தியுள்ளனர். இதை மங்கள உறுதிப்படுத்தி னார்.

மங்கள சமரவீர வாக்கு மூலம் வழங்குவதற்காகச் சென்றவேளை அவருடன் ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் சிலரும் சென்றனர்.

ஒரு நோக்கத்துக்காக இரண்டு கட்சிகளின் உறுப்பி னர்களும் இணைந்துகொண் டமை இதுவே தல்தடவை என மாத்தறை அரசியல்வாதியொரு வர் தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் மங்கள சமர வீர தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

20ஆவது திருத்தத்தை உடனே கைவிடுங்கள்!

அரசிடம் கோருகிறது சஜித் அணி

கொழும்பு, செப் 16

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவை அரசு கைவிட வேண்டும் என்று ஐக் கிய மக்கள் சக்தி வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியஅமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க இந்த வேண்டு கோளை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

நாட்டின் அடிப்படை தேவை 20ஆவது திருத்த மில்லை என்பதால் அதனை அரசு கைவிடவேண்டும்.

மக்கள் எதிர்கொள்ளும் உட னடி கடும் நெருக்கடிகளுக்குத் தீர்வைக் காண்பதற்கான முயற் சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் 20ஆவது திருத்தம் குறித்த தங்கள் நிலைப்பாடுகளை பகிரங்கமாக வெளியிட வேண்டும்.

ஜனநாயகத்தையும் முன்னேற்றகரமான விடயங் களையும் ஊக்குவித்த 19ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14 நாடாளுமன்ற உறுப் பினர்களும் ஒரு போதும் ஆதரவளிக்க முடியாது.

உத்தேச அரசமைப்பு மாற் றங்கள் குறித்து அரசு பிளவு பட்டுள்ளது. புதிய திருத்தங் களுக்கு எவரும் உரிமை கோரவில்லை. அமைச்சர்களுக் குக் கூட 20ஆவது திருத்த வரைவின் ஆவ ணத்தைத் தயாரித்தது யார் என் பது தெரியாத நிலை காணப் படுகின்றது-என்றார்.

சிறுவர்களுக்கு சூடு வைத்த வளர்ப்பு பெற்றோர் கைது!

திருமலை, செப் 16

திருகோணமலை தம்பலாகாமம் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் 15 மற்றும் 10 வயதுடைய சிறுவர்களுக்கு நெருப்பினால் கையில் சூடு வைத்த இருவரை இம்மாதம் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் விசாணி தேனவது நேற்று உத்தரவிட்டார்.

பத்தினிபுரம், பாலம்பட்டாறு, தம்பலாகாமம் பகுதியைச் சேர்ந்த 45 மற்றும் 38 வயதுடைய கணவன், மனைவியே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைதான பெண்ணின் சகோதரியின் இரண்டு 15 மற்றும் 10 வயதுடைய சிறுவர்கள் வளர்ப்பதற்காகக் கொடுக்கப்பட்டி ருந்தனர். இவர்கள் இருவருக்கும் கையில் நெருப்பை காய்ச்சி கம்பியினால் சூடு வைக்கப்பட்டுள்ளது.

சிறுமியின் தாய் வெளிநாடு சென்றுள்ள நிலையில் தந்தை வேறு திருமணம் முடித்து வாழ்ந்து வருகிறார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களைக் கைது செய்த பொலிஸார் கந்தளாய் நீதி மன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப் பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இரண்டு சிறுவர்களும் மருத்துவஅறிக்கைக் காக கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தாகப் பொலிஸார் கூறினர்.

தியாகி திலீபன் நினைவு பேரணி நடத்த பொலிஸ் அனுமதி மறுப்பு

வவுனியா, செப் 16

வவுனியாவில் இன்று இடம் பெறவிருந்த தியாகி திலீபனின் நினைவு தினத்துக்கு எவ்விதத் திலும் அனுமதி வழங்க முடி யாது என வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரி வித்தார் என வவுனியா நகர சபை உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினரும் வவுனியா மாவட்ட தியாகி திலீபனின் நினைவு தின ஏற்பாட்டாளரு மான பிரபாகரன் ஜானுஜன் தெரிவித்தார்.

அவர் கருத்து தெரிவிக்கையில்-

தியாகி திலீபனின் நினைவு தினத்தினை அனுஷ்டிப்ப தற்கும் வவுனியாவில் இருந்து பேரணியாக நல்லூர் நோக்கிச் செல்லவும் ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருந்தன.

எனினும் அதற்கு வவுனியா பொலிஸார் ஏற்கனவே அனு-மதி மறுத்திருந்தனர். இந்

நிலையில் நாம் அந்த நிகழ்வை நடத்த மீண்டும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோது நேற்று தனது அலுவலகத்துக்கு அழைத்திருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், அந்த நிகழ்வுக்கு அனுமதி வழங்கமுடியாது எனவும் யாழ். மாவட்டத்தில் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தடை யுத்தரவையும் எமக்கு உதாரணப் படுத்திச் சுட்டிக்காட்டினார்.

பொலிஸார் அனுமதி மறுத்த காரணத்தால் நாம் அந்த நிகழ்வை நடத்த முடியா துள்ளது-என்றார்.

நோர்வூட் இளைஞர் விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, செப் 16

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் மோட்டார் சைக்கிள், பஸ்ஸுடன் மோதுண்டு விபத் துக்குள்ளாகியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நானுஓயா பெலிஸ் பிரி வுக்குட்பட்ட வின்டிகோனர் பகுதியில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நோர்வூட் பகுதியிலிருந்து நுவரெலியா நோக்கிச் மோட் டார் சைக்கிள், நுவரெலியாவி லிருந்து ஹற்றன் நோக்கி வந்த இ.போ.ச. பஸ்ஸுடன் மோதுண்டு விபத்துக்குள் ளாகியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த நோர்வூட் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய செல்வகுமார் ராஜ் என்ற இளைஞரே உயிரி ழந்தார்.

தரிஷா பஸ்டியன் மீது துன்புறுத்தல் ஐ.நா.அறிக்கையாளர்கள் கவலை

கொழும்பு, செப் 16

சிரேஷ்ட ஊடகவியலாளர் தரிஷா பஸ்டியன் தொடர்ந்தும் துன்புறுத்தலுக்குள்ளாவது குறித்து ஐக்கிய நாடுகள் சபை யின் விசேட அறிக்கையா ளர்கள் ஐந்து பேர் கவலை வெளி யிட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர்கள், தரிசா பஸ் டியன் தனது எழுத்துக்களுக்கா கவும் இலங்கையில் மனித உரி மைகளுக்காக குரல் கொடுப் பதற்காகவும் இலக்கு வைக்கப் படுகின்றார் எனத் தெரிவித்துள் ளனர்.

தரிஷா பஸ்டியன் தொடர்ந் தும் துன்புறுத்தலுக்கு உள்ளா வதும், அவரது கணினி கைப் பற்றப்பட்டு அவரது தொலை பேசி ஆவணங்கள் பகிரங்கப் படுத்தப்படுவதும் அவரது தகவல் மூலங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்த லாம் என ஐ.நா. அறிக்கையாளர்கள் தெரிவித் துள்ளனர்.

அவர் ஒரு அனுபவமிக்க ஊடகவியலாளர் மற்றும் மனித உரிமை பாதுகாவலர் ஆவார், அவர் முன்னர் சண்டே ஒப்சேவ ரின் தலைமை ஆசிரியராகவும், நியூயோர்க் ரைம்ஸின் நிருப ராகவும் பணியாற்றியுள்ளார்.

சட்டவிரோத கொலைகள், அரசியல் ஊழல் மற்றும் தண்ட னையற்ற பிரச்னைகள் மற்றும் ஜனநாயக உரிமைகள் உள் ளிட்ட இலங்கையில் கடுமை யான மனித உரிமை மீறல்கள் குறித்து அவர் எழுதியுள்ளார்.

2009 ஆம் ஆண்டில் தி சண்டே லீடர் பத்திரிக்கையில் சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிர மதுங்க கொலை மற்றும் 2008-2009 காலப்பகுதியில் இலங்கை கடற்படை ஊழியர்களால் 11 இளைஞர்களை கடத்திக் கொலை செய்தமை பற்றியும் அவர் செய்தி வெளியிட்டார்.

எனவே இதன் காரணமாக பொதுமக்கள் நலன் மற்றும் மனித உரிமை தொடர்பான விட யங்கள் குறித்து எழுதுவதை ஏனைய ஊடகவியலாளர் கை விடலாம் எனவும் ஐ.நாவின் அறிக்கையாளர்கள் கூறி யுள்ளனர்.

இந்த நடவடிக்கைகள் அவ ரது பணிக்கு அவதூறு ஏற்படுத் தும் நோக்கத்திலான தாகயி ருக்கலாம் என நாங்கள் கவலை யடைந்துள்ளோம் எனவும் அவர் கள் தெரிவித்தனர்.

தரிசா பஸ்டியன் அரசியல் மற்றும் மனித உரிமை விவ காரங்கள் குறித்து செய்தி வெளி யிடுவதை, எழுதுவதைத் தடுப் பதற்கான முயற்சியாக இது இருக்கலாம் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகத்தின் ஊழியர் ஒருவர் சம்பந்தப்பட்டதாகக் கூறப் படும் கடத்தல் தொடர்பான விசாரணையில் பஸ்ரியனின் பெயர் இணைக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து நீதிமன்றத் தேடுதல் உத்தரவு அனுமதிக்கு அமைய, நாரஹேன்பிட்டி வீட்டிலிருந்து சி.ஐ.டி.யினரால் பிரபல ஊடகவியலாளர் தரிஷா பஸ்ரியனின் மடிக் கணினி உட்பட இலத்திரனியல் பொருட்கள் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

ஜெருசலேமில் பள்ளிவாசலை இடித்தழிக்க இஸ்ரேல் உத்தரவு

ஜெருசலேம், செப். 16

இஸ்ரேல் ஆக்கிரமித்ததாகக் கூறப்படும் கிழக்கு ஜெருசலேமின் சில்வான் நகரிலுள்ள பள்ளிவாசல் ஒன்றை இடிக்க இஸ்ரேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

சட்டவிரோதமாகக் கட்டப்பட்டது என்று கூறியே அல் அக்ஷா என்ற பள்ளிவாசலை இடித்தழிக்க உத்தரவிட்டதாக பலஸ்தீனிய ஊடகம் ஒன்று வெளிப்படுத்திள்ளது.

ஜெருசலேமில் உள்ள முஸ்லிம்களின் புனித இடங்களையும் வழிபாட்டுத் தலங்களையும் பாதுகாக்க முன்வருமாறு சர்வதேசத்திடமும் அரபு நாடுகளிடமும் பலஸ்தீன மத விவகார அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது.

பள்ளிவாசலை இடித்தழிக்க சில்வான் நகர மக்களுக்கு 21 நாள் காலக்கெடுவை அந்த நீதிமன்று வழங்கியுள்ளது.

2012 ஆண்டு கட்டப்பட்ட இந்தப் பள்ளிவாசலில் நூற்றுக்கணக்கானவர்கள் வழிபாடாற்றி வருகின்றனர். 2015 ஆம் ஆண்டு இந்தப் பள்ளிவாசலை இடிக்க உத்தரவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை சில்வான் நகரில் பலஸ்தீனர்களுக்கு சொந்தமான 2018 ஆம் ஆண்டு 72 வீட்டுத் தொகுதிகளும், 2019 ஆம் ஆண்டு 104 வீட்டுத் தொகுதிகளும் சட்டவிரோதமானவை எனக் கூறி இஸ்ரேல் அரசு அவற்றை இடித்தழித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

படகு கவிழ்ந்ததில் 3 அகதிகள் மரணம்

56 பேர் மீட்கப்பட்டனர்

எதேன்ஸ், செப். 16

கிரீஸின் தெற்குத் தீவான கிரீட்டஷிலிருந்து அகதிகளை ஏற்றிச் சென்ற படகு மூழ்கியதில் மூவர் உயிரிழந்தனர். 56 பேர் காப்பாற்றப்பட்டனர்.

உயிரிழந்தவர்களில் இரண்டு குழந்தைகளும் ஒரு பெண்ணும் உள்ளடங்குகின்றனர்.

கிரீட்டின் கிழக்கு கடற்கரையில் இருந்து 12 கடல் மைல் (14 மைல்) தொலைவிலேயே சடலங்கள் மீட்கப் பட்டுள்ளன.

ஒரு மணி நேரத்திற்கு 61 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசியதன் காரணமாகவே படகு விபத் துக்கு உள்ளானது என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந் நிலையில் படகில் மொத்தமாக எத்தனைபேர் பயணித்தார்கள் என்பது தெரியாததனால் இரண்டு கடலோர காவல்படை படகுகள் மற்றும் மூன்று வணிகக் கப்பல்களுடன் கிரேக்க கடற்படைப் படை மற்றும் விமானப்படை ஹெலிகொப்டர் ஆகியவை தேடுதல்களை முன்னெடுத்து வருகின்றன.

புலம்பெயர்ந்தோர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது தொடர்பிலும் தகவல்கள் வெளியாகவில்லை.

உச்சம் தொட்டது கொரோனா தொற்று

நியூயோர்க், செப். 16

உலக அளவில் கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் தினசரி எண்ணிக்கை இதுவரை இல்லாத புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

நேற்று மதியம் வரையான 24 மணி நேரத்தில் 3 இலட்சத்து 7 ஆயிரத்து 930 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. உலக நாடுகளில் இந்தியா, அமெரிக்கா, பிரேஸில் ஆகிய நாடுகளில்தான் மிக அதிக எண்ணிக்கையிலான தொற்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுமட்டுமின்றி, கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் கொரோனா தொற்றுக்கு உலகம் முழுவதும் 5 ஆயிரத்து 537 பேர் பலியாகினர். இந்த எண்ணிக்கையிலும் அமெரிக்கா, இந்தியா, பிரேஸில் ஆகிய நாடுகள் முன்னிலை வகிக்கின்றன. அமெரிக்கா, இந்தியா ஆகிய இரு நாடுகளிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களும், பிரேஸிலில் 800-க்கும் மேற்பட்டவர்களும் கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா நோய் பாதிப்பு காரணமாக உயிரிழந்தனர்.

இதற்கு முன்னர், இந்த மாதம் 6-ஆம் திகதிதான் உலக அளவில் அதிகபட்ச தினசரி கொரோனா நோய்த்தொற்று பதிவு செய்யப்பட்டது. அந்த நாளில் மட்டும் 3,06,857 பேருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உலகம் முழுவதும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கோடியே 94 இலட்சத்தைக் கடந்துள்ளது.

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவருக்கு விஷம் செலுத்தப்பட்டமை உறுதி

பெர்லின், செப். 16

ரஷ்ய எதிர்கட்சி தலைவர் அலெக்சி நவல்னி, கடந்த மாதம், 20 ஆம் திகதி திடீர் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டார். உடனடியாக ஜேர்மனிக்கு கொண்டு செல்லப்பட்ட அவர், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

முன்னதாக, அவருக்கு, விஷம் செலுத்தப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. ஒரு வாரம் கோமா நிலையில் இருந்த அலெக்சி, தற்போது குணமடைந்து வருகிறார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து, ஜேர்மனி இராணுவ பரிசோதனை கூடம், ஆராய்ச்சி மேற்கொண்டது. அதில், அலெக்சி நவல்னிக்கு, ரஷ்ய தயாரிப்பான, "நோவிசாக்" எனப்படும், விஷம் செலுத்தப்பட்டது தெரியவந்தது. விஷம் செலுத்தப்பட்டதால் அவரின் ஆரோக்கியம் பல நாட்களுக்கு பாதிக்கப்படும் என்றனர்.

இது குறித்து, பிரான்ஸ், சுவீடன் நாடுகளும், பரிசோதனை நடத்தின. அந்த நாடுகளும் அவருக்கு விஷம் செலுத்தப்பட்டமையை ஏற்கனவே உறுதி செய்துள்ளனர்.

ஆனால், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும், வெளிவிவகார அமைச்சர் செர்கே லவ்ராவும் இதனை மறுத்துள்ளனர்.

வைரலாகும் போலி மீம்!

ஒன்ராறியோ, செப். 16

கனடா பிரதமர் ஜஸ்டின் ரூடோ, "ஹிந்தி தெரியாது போடா" எனும் வாசகம் அடங்கிய, "ரீ-சேர்ட்" கையில் வைத்திருப்பது போன்ற மீம் ஒன்று பிரபலமாகி வருகின்றது.

இந்தியாவில் ஹிந்தியை கட்டாய மொழியாக மாற்ற ஆளும் கட்சி நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இதற்கு எதிராக தமிழகத்தில் ஹிந்தி எதிர்ப்பு விடயங்கள் பிரபலமாகி வருகின்றன. "ஹிந்தி தெரியாது போடா" என்ற வாசகம் பொறித்த மாஸ்க், ரீ- சேர்ட்கள் சமூகவலைத்தளங்களில் பிரபலமாகி வருகின்றன.

இந்நிலையில், கனடா பிரதமர் ஜஸ்டின் ரூடோவின் போட்டோ ஒன்றையும், போலியாக மாற்றியுள்ளனர். ஜஸ்டின் ட்ரூடோ, "ஹிந்தி தெரியாது போடா" எனும் வாசகம் அடங்கிய ரீ-சேர்ட்டை தனது கையில் பிடித்திருப்பது போன்று மீம் ஒன்று இணையதளத்தில் உலாவி வருகிறது.

ஆனால், இது உண்மையில்லை.இந்த மீம் "போட்டோசொப்" மூலம் எடிட் செய்யப்பட்டு, சமூகவலைதளங்களில் பரப்பப்பட்டு வருகிறது. ஜஸ்டின் ரூடோ தடுப்பு மருந்து குறித்து, "வேக்சின்ஸ் ஆர் சேஃப் அண்ட் சேவ் லைவ்ஸ். லவ் திஸ் சேர்ட்" என்ற ஆங்கில வாசகத்துடன் அவரது ருவிட்டர் பக்கத்தில், 2019 ஆம் ஆண்டு மே 30 ஆம் திகதி வெளியிட்டார். இதனையே இப்போது மாற்றிப் பதிவிட்டுள்ளனர்.

வெள்ளத்தில் மூழ்கிய பிரபல நடிகர் ஜக்கி சான்

பீஜிங், செப். 16

படப்பிடிப்பின் போது சுமார் 45 செக்கன்கள் காட்டாற்று வெள்ளத்தில் மூழ்கிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பிரபல நடிகர் ஜக்கி சான் வேன் கார்ட் என்ற ஆங்கில படத்தில் நடித்து வருகிறார். இதன் படப்பிடிப் பின்போது, ஜக்கி சானும் மற்றொரு நடிகரும் வெள்ளத்தில் ஸ்கூட்டரில் பயணித்தனர்.

எதிர்பாராதவிதமாக ஸ்கூட்டர் கவிழ்ந்து வெள்ளத் தில் மூழ்கினர். சுமார் 45 செக்கன்கள் வெள்ளத்துக்குள் மூழ்கிய ஜக்கி சானை கண்டு பிடிக்க முடியவில்லை. எனினும் சில நிமிடப் போராட்டத்தின் அவர் மீட்கப்பட்டார். விபத்தை அடுத்து படப்பிடிப்பைத் தள்ளி வைக்க தயாரிப்பாளர்கள் கேட்டுக் கொண்ட போதும், சிறிது நேர ஓய்விற்கு பின் மீண்டும் அதே காட்சியில் நடித்து முடித்தார் ஜக்கி சான்.



பிக் பாஷிலிருந்து விலகுகிறார் ஆர்ச்சர்?

லண்டன், செப். 16

கொரோனா பாதுகாப்பு நெருக்கடி காரணமாக பிக் பாஷ் ருவென்ரி - 20 தொடரில் இருந்து இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் ஆர்ச்சர் முடிவு செய்துள்ளார்.

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியில், ஆர்ச்சர் கொரோனா பாதுகாப்பு விதிமுறையை மீறினார். இதனால், அவருக்கு இரண்டாவது போட்டியில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டது.

கொரோனா பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கும் வீரர்கள் வெளியே செல்லக்கூடாது, குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் வெளி ஆள்களைச் சந்திக்கக் கூடாது. இதன்மூலம் கொரோனாவிலிருந்து வீரர்களைக் காக்க முடியும் என்பதால் இந்த ஏற்பாட்டின்படி கிரிக்கெட் தொடர்கள் நடைபெற்று வருகின்றன.

இதுபற்றி அவர் கூறுகையில், கடந்த பெப்ரவரி மாதத்துக்குப் பிறகு என் குடும்பத்தை நான் பார்க்க வில்லை. இப்போது செப்ரெம்பர் ஆகிவிட்டது. ஐ.பி.எல்லுக்காக ஒக்ரோபர் வரை இருக்க வேண்டும். நவம்பரில் நாங்கள் தென்னாபிரிக்காவுக்குச் செல்கிறோம். டிசம்பரில் மட்டும் சில வாரங்கள் எனக்கு ஓய்வு கிடைக்கும். பிக்பாஷ் போட்டியில் விளையாடுவது எனக்குப் பிடிக்கும். ஆனால், என் குடும்பத்தினரிடம் நான் நேரத்தைச் செலவிட வேண்டும். எனவே இந்த வருட பிபிஎல் டி20 போட்டியில் நான் விளையாடாமல் போகலாம்", என்றார்.

டோனியின் பாணியில் ஆடவே விரும்புகிறேன்

அதிரடி வீரர் மில்லர்

டுபாய், செப். 16

இந்திய கிரிக்கெட் அணியின் மகேந்திர சிங் டோனி போன்று போட்டியை வெற்றியுடன் முடிக்க நானும் விரும்புகிறேன் என தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் டேவிட் மில்லர் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா அணியின் இடது கை அதிரடி துடுப்பாட்ட வீரரான டேவிட் மில்லர், கடந்த 8 ஆண்டுகளாக கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காக விளையாடி வந்தார். இம்முறை ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்காக விளையாடவுள்ளார்.

இதுகுறித்து டேவிட் மில்லர் கூறுகையில், "டோனி அவரது வேலையை எப்படி செய்து முடிக்கிறாரோ அதே வழியில் நானும் செல்ல விரும்புகிறேன். அவர் அமைதியாக இருப்பது, அவர் எப்போதும் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறார் என்று நினைக்க தோன்றும். அவர் தன்னை சித்திரிக்கும் விதம், மிகவும் சிறந்தது. அவரைப் போன்று நானும் விரும்பி செயல்படுவேன். அதே சக்தியை வெளிப்படுத்த முயற்சி செய்வேன்.

டோனி அவரின் பலம் மற்றும் பலவீனத்தை தெரிந்து வைத்து அதற்கு ஏற்ப செயற்படுகிறார். நானும் அதை செய்வேன். அவரைப்போன்று துடுப்பெடுத்தாட

வேண்டும் என்பதை விட, அவரின் சில 'சேஸிங்கை' கண்டு வியப்படைகிறேன். அவரைப் போன்று போட்டியை நிறைவு செய்ய வேண்டும் என விரும்புகிறேன்.", என்றார்.

நியூயோர்க், செப். 16

2020 ஆம் ஆண்டின் அதிக வருமானம் ஈட்டிய கால்பந்து வீரர்களுக்கான போர்ப்ஸ் இதழின் பட்டியலில் பார்சிலோனா வீரர் லியோனல் மெஸ்ஸி முதலிடத்தில் உள்ளார்.

மெஸ்ஸியின் ஆண்டு வருவாய் 12 கோடியே 60 இலட்சம் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

இப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் கிறிஸ்டியானோ ரொனால்டோ உள்ளார். அவரது ஆண்டு வருவாய் 11 கோடியே 70 இலட்சம் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

இப் பட்டியலில் நெய்மர் மூன்றாவது இடத்திலும், கிலியான் எம்பாப்பே நான்காவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் கொரோனா விதிகள்: பங்களாதேஷ் கிரிக்கெட் நிராகரிப்பு

மறுபரிசீலனை நடத்த நாமல் உத்தரவு

கொழும்பு, செப். 16

இலங்கைக்கு எதிராக ஆரம்ப மாகவுள்ள டெஸ்ட் தொடர் குறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபை எழுப்பிய ஆட்சேபனை குறித்து ஆராயுமாறு இலங்கை கிரிக்கெட் சபைக்கு விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் திட்டமிடப்பட்டிருந்த இலங்கை - பங்களாதேஷ் அணிகள் இடையிலான டெஸ்ட் தொடர் கொரோனா தொற்றால் ஒத்தி வைக்கப்பட்டது.

இதன்படி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியை ஒக்ரோபர் 24 ஆம் திகதி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டது.

அதனால், இப்போட்டியில் விளையாடுவதற்காக செப்ரெம்பர் 27 ஆம் திகதி பங்களாதேஷ் அணி இலங்கைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதனிடையே பங்களாதேஷ் வீரர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் பற்றி தேசிய கொரோனா தடுப்பு செயல்பாட்டு மையம் வெளியிட்டது.

ஆனால், இந்த விதிமுறைகளை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை

நிராகரித்து விட்டது.

இந்நிலையில் இது தொடர்பில் மீள்பரிசீலனை செய்யவும், தேசிய கொரோனா தடுப்பு செயல்பாட்டு மையத்துடன் பேச்சு நடத்தவும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

உலகின் எந்த மூலையிலும் விளையாட நான் தயார்

புதுடில்லி, செப். 16

உலகின் எந்தப் பகுதியிலும் விளையாட நான் தயாராக உள்ளேன் என வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் கூறியுள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் ஆட்டநிர்ணய சதியில் ஈடுபட்டமைக்காக ராஜஸ்தான் றோயல்ஸின் ஸ்ரீசாந்த் உட்பட மூவருக்கு ஆயுள் தடை விதிக்கப்பட்டது. இதுதொடர்பான மேல் விசாரணையில் ஸ்ரீசாந்தின் தடைக்காலம் கடந்த 13 ஆம் திகதியுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில் உலகின் எந்தப் பகுதியிலும் விளையாடத் தயாராக உள்ளார் என்று ஸ்ரீசாந்த் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"என்னை அழையுங்கள். உலகின் எந்தப் பகுதிக்கும் வந்து விளையாடத் தயாராக இருக்கிறேன். கழகங்களின் கிரிக்கெட் ஆட்டங்களில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இலங்கை ஆகிய நாடுகளில் உள்ள முகவர்களிடம் பேசிக்கொண்டிருக்கிறேன். 2023 உலகக்கிண்ணத்தில் இந்திய அணிக்காக நான் விளையாட வேண்டும். எம்.சி.சி., ரெஸ்ட் ஒவ் வேர்ள்ட் அணிகள் லோர்ட்ஸ் மைதானத்தில் விளையாடும் ஆட்டத்திலும் பங்கேற்க வேண்டும்" - என்றார்.

சுமந்திரனின் செயற்பாட்டால் கொழும்பில் ஓர் ஆசனத்தை இழந்தது கூட்டமைப்பு!

குற்றச்சாட்டுகளை அடுக்குகிறார் தவராசா

(நேற்றைய தொடர்ச்சி)

(9) முன்னாள் போராளிகள் தடுப்புக்காவலில்

(அ) முன்னாள் போராளிகளை இணைப்பது சம்பந்தமாக தீர்மானத்தை கொண்டு வந்தபோது தான் மட்டுமே தீர்மானத்திற்கு ஆதரவாக செயல்பட்ட தாக கூறும் ஆயுதப்போராட்டத்தையும் விரும்பாத ஆபிரகாம் சுமந்திரன் முன்னாள் போராளிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள வழக்கில் முதலாவது அரசதரப்பு சாட்சி ஆபிரகாம் மதியாபரணம் சுமந்திரன்.

(ஆ) சுமந்திரனுக்கு 16 அதிரடிப்படை யினரும் 4 பொலிஸாருமாக 20 பேர் பாதுகாப்பு வழங்குகின்றனர். சுமந்திரன் தனக்கு யாரால் அச்சுறுத்தல் என்று வெளிப்படையாக இன்றுவரை பொது வெளியில் கூறவில்லை. ஆனால் அப்பாவி 20 தமிழ் இளைஞர்கள் சிறையிலும் தடுப்புக்காவலிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இருபது குடும்பங்களின் ஜீவனோபாயம் முழுமையாக குழி தோண்டிப் புதைக் கப்பட்டுள்ளது. இச் செயல்பாட்டினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு தேர்தலில் பெரும் சரிவு ஏற்படுவதற்கு காரணமாக அமைந்தது.

20 தமிழ் இளைஞர்கள் சிறையிலும் தடுப்புக்காவலிலும் உள்ளனர்.

(10) இறுதியுத்தம் ஒரு வாகன விபத்து

பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் ஆடி மாதம் ஐ.பி.சி தமிழ் ஊடகத்திற்கு ஆ.சுமந்திரன் வழங்கிய செய்தியில் இறுதி யுத்தத்தில் குண்டுவீச்சில் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டதை சாதாரண வாகன விபத்தோடு ஆ.சுமந்திரன் ஒப்பிட்டு செவ்வி வழங்கியது அவரது மனநிலையை நன்கு கோடிட்டுக் காட்டுகின்றது. இச்செயல்பாடு தமிழ் மக்களிடையே பெரும் வேதனையையும் அதிர்வலையையும் ஏற்படுத்தி தமிழ்த் தேசிய வாக்குவங்கியை தகர்த்தது .

(11) கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதை திட்டமிட்டு தவிர்த்த சுமந்திரன்

(அ) கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் தமிழரசுக் கட்சியின் தலைவரும் அதிக அக்கறை செலுத்திய நிலையில் கொழும் புக் கிளையைக் கூட்டி பல கட்டங்களா கக் கலந்தாலோசனை செய்யப்பட்ட பொழுது கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட வேண்டுமென்ற கருத்து கொழும்பு கிளையின் நிர்வாகிகள் அங்கத்தவர்கள் ஆதரவாளர்கள் மத்தியில் மேலோங்கிக் காணப்பட்ட போதிலும் சுமந்திரன், மனோ கணேச னுக்கு ஆதரவு நிலையையே வெளிப் படுத்தியதுடன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரின் இல்லத்தில் மனோ கணேசனு டன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவர் என்ற முறையில் நான் கலந்து கொள்ள வேண்டு மெனக் கூறிய போதிலும் பேச்சுவார்த்தை யில் நான் கலந்து கொள்வதை சுமந்திரன் சுயநல நோக்கில் தவிர்த்து தலைமைத்து வத்தை திசைதிருப்பி கொழும்பு மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி போட்டியிடுவதில்லை என்ற தீர்மானத்தை எடுக்கும் சூழ்நிலையை உருவாக்கினார்.

ஓர் ஆசனத்தை இழந்தோம்

(ஆ) கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டிருந்தால் ஒரு நாடாளு மன்ற உறுப்பினரை பெற்றிருக்கலாம். அவ்வாறு வெற்றி பெறமுடியாத நிலையில் நிச்சயமாக தேசிய பட்டியலில் ஒரு ஆசனத்தை பெற்றிருக்கலாம். நான் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடக் கூடாது என்பது மட்டுமின்றி தனது தெரிவான அம்பிகா சற்குணநாதனை தேசியப் பட்டியலில் உள்வாங்கி தேசியப் பட்டியலில் நியமனம் வழங்கி விடவேண்டுமென்ற நோக்கத்தில் சுமந்திரன் 18.03.2020 இல் தலைமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்ட தேசியப் பட்டியலில் முதலாவது இடத்திலிருந்த எனது பெயரை பின்தள்ளியது மட்டுமின்றி வழமைக்கு மாறாக 19.03.2020ல் ஊடக சந்திப்பை நடத்தி அம்பிகா சற்குணநாதனின் பெயர் முதலிடத்தில் இருப்பதாக பகிரங்கமாக பொது வெளியில் அறிவித்தார். (தேசியப் பட்டியலில் எனது பெயரை உள்வாங்கும்படி நான் தலைமையிடம் எந்தக் கோரிக்கையும் வைக்கவில்லை)

> **கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டிருந்தால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை பெற்றிருக்கலாம். அவ்வாறு வெற்றி பெறமுடியாத நிலையில் நிச்சயமாக தேசிய பட்டியலில் ஒரு ஆசனத்தை பெற்றி ருக்கலாம். நான் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடக் கூடாது என்பது மட்டுமின்றி தனது தெரிவான அம்பிகா சற்குணநாதனை தேசியப் பட்டியலில் உள் வாங்கி தேசியப் பட்டியலில் நியமனம் வழங்கி விடவேண்டு மென்ற நோக்கத்தில் சுமந்திரன் 18.03.2020 இல் தலைமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்ட தேசியப் பட்டியலில் முதலாவது இடத்திலிருந்த எனது பெயரை பின்தள்ளியது மட்டுமின்றி வழமைக்கு மாறாக 19.03.2020ல் ஊடக சந்திப்பை நடத்தி அம்பிகா சற்குணநாதனின் பெயர் முதலிடத்தில் இருப்பதாக பகிரங்கமாக பொது வெளியில் அறிவித்தார்.**

கொழும்பு மாவட்டத்தில் தமிழரசுக்கட்சியின் கொழும்புக் கிளை போட்டியிட்டு நான் நாடாளுமன்றிற்கு தெரிவு செய்யப்படுவதையோ அல்லது தேசியப் பட்டியல் மூலம் தெரிவாகின்றமையை ஆபிரகாம் சுமந்திரன் திட்டமிட்ட செயல்பாட்டின் மூலம் தடுத்துள்ளார்.

(12) தமிழ் தேசிய கூட்டமைப்பு சஜித் பிரேமதாஸவின் ஜக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவா?

(அ) கொழும்பு மாவட்டத்தில் தமிழ் வேட்பாளர்கள் தேசிய கட்சியுடன் இணைந்தே போட்டியிட்டனர். அதனால் தேர்தல்களில் எந்தத் தேசியக் கட்சிக்கும் ஆதரவு அளிப்பதில்லையென்பது தமிழ் தேசிய கட்சியான தமிழரசுக் கட்சியின் கொள்கை ரீதியான நிலைப்பாடாகும். 'தேசிய கட்சிகளையோ அல்லது தேசிய கட்சியுடன் இணைந்து செயல்படும் எந்த தமிழ் வேட்பாளர்களையும் வெளிப்படையாக ஆதரிப்பதில்லை' என்ற கொள்கை ரீதியான முடிவே கட்சியின் முடிவாகயிருந்தது. 2015ஆம் ஆண்டுத் தேர்தலிலும் கொள்கை ரீதியான முடிவு பின்பற்றப்பட்டது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரான சுமந்திரன் தேர்தல் பரப்புரை இறுதிநாளில் வடக்கு, கிழக்கை தாயகமாகக் கொண்ட கொழும்பு மாவட்ட தமிழ் வாக்காளர்களை சஜித் பிரேமதாஸ வைத் தலைவராகக் கொண்ட ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட மனோ கணேசனுக்கு வாக்களிக்கும்படி தமிழ்த் தேசியக் கூட்மைப்பின் தலைமைத்து வத்துடனோ அல்லது 10 வருடங்களாக இயங்கிக் கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சி கொழும்புக் கிளையிடமோ கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக முடிவெடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடிப்படைக் கொள்கைக்கு முரண்படும் முடிவை சுயநலநோக்கில் தன்னிச்சையாக எடுத்து தமிழ் வாக்காளர்களுக்கு பகிரங்கமாக வேண்டுகோளை முன்வைத்தார்.

(ஆ) ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட மனோ கணேசனுக்கு வாக்களிக்கும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரான ஆபிரகாம் சுமந்திரன் ஒரு வேண்டுகோளை முன்வைத்தமை யாழ்,கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் தமிழரசுக் கட்சிக்குக் கிடைக்க வேண்டிய 13,564 தமிழ் வாக்குக்களை ஐக்கிய மக்கள் சக்தி பெறுவதற்கான ஊன்றுகோலாக அமைந்தது. ஊடகப் பேச்சாளர் சுமந்திரனின் இச்செயல்பாடு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வாக்கு வங்கிச் சரிவுக்கு ஒரு முக்கிய காரணமாகும்.

அரசியல் ரீதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிலைநிறுத்தும் பல்வேறு முக்கிய தீர்க்கமான தருணங்களில் எட்டப்பட்ட பொருத்தமற்ற முடிவுகள் இங்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. கட்சியின் நலனை முதன்மைப்படுத்தி திட்டங்களை வகுப்பதும் செயற்படுத்துவதும் கட்சியின் மீது பற்றுக் கொண்ட அனைவரதும் கடப்பாடாகும் ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரான ஆபிரகாம் மதியாபரணம் சுமந்திரன் தொடர்ந்தும் தமிழ்மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் தமிழ் தேசியத்தை கொச்சைப்படுத்தியதுடன் தன்னிச்சையாக செயல்பட்டமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பாரிய பின்னடைவுக்கு எடுத்துச் சென்றுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சாட்சியங்களின் அடிப்படையில் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சுமந்திரன் கட்சியிலிருந்து நீக்கப்படலாம். இது தொடர்பில் தலைமைத்துவம் உடனடியாக செயல்படாவிடின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமையை விட மிக மோசமான நிலைமை தமிழரசுக்கட்சிக்கு ஏற்படுத்தப்பட்டு தமிழும் தேசியமும் அழிக்கப்பட்டுவிடும்.

கே.வி. தவராசா
கொழும்புக் கிளைத் தலைவர்,
அரசியல் உயர்மட்டக் குழு உறுப்பினர்
தேர்தல் நியமன தெரிவுக்குழு
உறுப்பினர், சர்வதேச விவகாரக்குழு
உறுப்பினர்,
மத்தியகுழு உறுப்பினர்,
இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி

(முற்றும்)

செய்திகள்

இரவோடு இரவாக நல்லூரில் அகற்றப்பட்ட தியாகி திலீபன்

அலங்காரங்களும் பிடுங்கப்பட்டன

யாழ்ப்பாணம், செப்.16

நல்லூரில் தியாகி திலீபனின் நினைவு நிகழ்வுக்காக அவரது நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அலங்காரங்கள், திலீபனின் உருவப்படம் என்பன பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இரவோடு இரவாக அகற்றப்பட்டன.

தியாகி திலீபனின் நினைவேந்தல் ஆரம்ப நாள் நேற்றாகும். இதனை முன்னிட்டு, தியாகி திலீபனுக்கு பல்வேறு தரப்பினரும் அஞ்சலி செலுத்தத் தயாராகியிருந்தனர்.

அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், பொதுமக்கள், மாணவர்கள் என இதற்கான ஏற்பாடுகளைப் பல தரப்பினரும் செய்து வந்தனர்.

இந்த நிலையில் தியாகி திலீபனின் நினைவு நாள் நேற்று ஆரம்பமான நிலையில் யாழ். பல்கலைக்கழகம், நல்லூர் திலீபன் நினைவுத்தூபி ஆகியவற்றில் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்காரம் செய்யப்பட்டு சிறிய கொட்டகை அமைக்கப்பட்டு திலீபனின் உருவப்படமும் அங்கு வைக்கப்பட்டிருந்தது.

நேற்று முன் தினம் நள்ளிரவு அங்கு சென்ற பொலிஸார் அவற்றை அகற்றியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், திலீபனின் நினைவஞ்சலி ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தபோது, சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்று தடையேற்படுத்தியதால் பரபரப்பு ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு திலீபனின் நினைவுத்தூபி, யாழ். பல்கலைகழக வளாகம் ஆகியவற்றில் இருந்த சிவப்பு, மஞ்சள் கொடிகள், திலீபனின் உருவப்படம் என்பன பொலிஸாரால் அகற்றப்பட்டன.

மீள்பிறப்பாக்க வளங்கள் மூலமான மின்னுற்பத்தியை அதிகரிக்க முடிவு

ஜனாதிபதி விசேட பணிப்புரை

கொழும்பு, செப். 16

2030 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த மின் தேவையில் 70 வீதத்தை மீள்பிறப்பாக்க சக்தி வள மூலங்களின் மூலம் உற்பத்தி செய்வதற்கு திட்டமிட வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சூரிய சக்தி, காற்று மற்றும் நீர்மின்சார உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், எதிர்கால தலைமுறைக்கு பெறுபேறுகளை அனுபவிக்கக்கூடிய பேண்தகு அபிவிருத்திக்கு வழிவகுக்கும் வகையில் முடியுமானளவு மீள்பிறப்பாக்க சக்தி வளங்களை பயன்படுத்த வேண்டும். திட்டத்திற்கு அனுமதியளிக்கும் அதிகாரத்தை கொண்டுள்ள நிறுவனங்கள் சாத்திய வள அறிக்கைகளை தயாரிக்க வேண்டும். அத்துடன், அனுமதியை விரைவாக வழங்க வேண்டும். ஒரு திட்டத்திற்கு அனுமதி கோரப்படும்போது 14 நாட்களுக்குள் அதற்கு பதில் வழங்கப்படாவிட்டால், அதற்கு அனுமதியளிக்கப்பட்ட தாக கருதுவதே பொருத்தமா னது.

குத்தகை நடைமுறையின் ஊடாக தெரிவு செய்யப்படும் அனைத்து திட்டங்களும் மூன்று மாதங்களில் ஆரம்பிக்கப்படாவிட்டால், வழங்கப்பட்ட அனுமதி ரத்துச் செய்யப்பட வேண்டும். காற்று அல்லது சூரிய சக்தி திட்டங்களை ஆரம்பிப்பதற்கு தனியார் தொழில் முயற்சியாளர்களுக்கு உள்ள தடைகளை நீக்கி அரசாங்கம் அனைத்து ஊக்குவிப்பு களையும் செய்ய வேண்டும் என்றார்.

மீள்பிறப்பாக்க சக்திவள அபிவிருத்திக்கு அரசாங்கம் அதிகம் முன்னுரிமையளித்துள்ளது. அதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு அனைத்து நிறுவனங்களுக்கும் சுற்றுநிரூபம் ஒன்றை வெளியிடவும் இதன்போது பணிக்கப்பட்டது.

முட்டாள்களே திலீபனை நோயாளியாகக் காண்பர்

கமால் குணரத்னவுக்கு ஐங்கரநேசன் பதில்

யாழ்ப்பாணம், செப். 16

திலீபன் உண்ணாவிரதம் இருந்தமை தலைவர் பிரபாகரனின் முடிவோ, தெரிவோ அல்ல. திலீபன் சுயமாகவே இந்த முடிவை எடுத்துத் தலைவர் பிரபாகரனிடம் அதற்கான ஒப்புதலைப் பெற்றிருந்தார். திலீபன் ஓர் அரசியல் போராளி, நோயாளி அல்ல. நல்ல தேக ஆரோக்கியத்துடனேயே நல்லூரான் வீதியில் உண்ணா விரத மேடையில் ஏறினார். பிணியால் அல்ல, தன் குடலில் தானே மூட்டிய பட்டினித் தீயாலேயே தன் உடல் கருக்கினார்.

இவ்வாறு, தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன பதிலளிக்கும் விதமாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்படி தெரிவித்தார்.

மேலும், முள்ளிவாய்க்கால் யுத்தத்திற்குப் பின்னர் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான தரப்பினர்களாலும் பேரினவாதிகளாலும் விடுதலைப்புலிகள் பற்றிய பல்வேறு ஊகங்களும், தவறான தகவல்களும் பரப்பப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்றே திலீபன் உண்ணாவிரதத்தால் உயிரிழக்கவில்லை, அவர் நோயாளி என்பதாலேயே பிரபாகரனால் உண்ணாவிரதம் இருக்க அனுப்பி வைக்கப்பட்டார் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலர் கமால் குணரத்ன கூறியிருக்கும் நயவஞ்சகக் கருத்து ஆகும். விடுதலைப் புலிகள் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டாலும் அவர்கள் பற்றிய உண்மைகள் ஒருபோதும் தோற்கடிக்கப் படாது.

திலீபன் அவரது உணவுக் குழாயில் உலங்கு வானூர்தியில் இருந்து சுடப்பட்ட சன்னம் பாய்ந்தமையால் சத்திர சிகிச்சைக்கு ஆளாக நேரிட்டது. இதன்போது அவரது உணவுக் குழாயில் ஆட்டுக்குடல் பொருத்தப்பட்டதாக வதந்தி பரவியது. அறிவியல் உலகத்துக்கு எந்த வகையிலும் பொருந்தாத இந்தப் பொய்யை மெய்யென நம்பும் முட்டாள்களே திலீபனை நோயாளியாக இனங்காண்பர். திலீபன் உடல் வலிமை மாத்திரம் அல்ல, மனோ

வலிமையையும் கொண்டிருந்த ஒருவர் என்பதனாலேயே உணவை மாத்திரம் அல்லாமல் ஒரு சொட்டு நீர் கூட அருந்தாது அவரால் நோன்பு இருக்க முடிந்தது.

உண்ணா நோன்பில் அவர் தமிழினத்தின் நன்மை கருதி முன்வைத்த கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாமல் இன்றும் அவரது ஆன்மா பசியுடனேயே இருக்கிறது. அவரது உன்னதமான ஜனநாயகப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திய பேரினவாத அரசு இன்று அவருக்கான அஞ்சலிக்கும் தடைவிதித்திருக்கிறது, அஞ்சலி நிகழ்ச்சிகளுக்குத் தடைபோடலாம். ஆனால், மக்கள் மனங்களில் குடியேறியிருக்கும் திலீபன் பற்றிய எழுச்சி நினைவுகளுக்கு ஒருபோதும் தடைபோட முடியாது - என்றுள்ளது.

"20 ஆவது திருத்தம் தொடர்பில் எங்களுக்குள் வேறுபாடுகள் உண்டு"

20ஆவது திருத்தச் சட்ட மூலம் தொடர்பாக சில சரத்துக்களில் கருத்து வித்தியாசங்கள் எங்களுக்குள்ளேயே இருக்கின்றமையால் அதுதொடர்பாக தீவிரமாக ஆராய்ந்து வருகின்றோம் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

20 ஆவது திருத்தச்சட்ட மூலம் தொடர்பாக ஆராய, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட குழுவின் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன் பின்னர் நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், இதுதொடர்பான எமது அனைத்துக் கருத்துக்களையும் அமைச்சரவைக்கும் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் தெரியப்படுத்துவோம். பெரும்பான்மையான சரத்துக்களுக்கு நாம் அனைவரும் ஒருமித்த கருத்துக்களுடன்தான் காணப்படுகிறோம்.

அதேநேரம், சில சரத்துக்களில் கருத்து வித்தியாசங்கள் இருப்பதால், இதுதொடர்பாகவும் தீவிரமாக ஆராயவுள்ளோம் என விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ரூ.3 இலட்சம் கஞ்சாவுடன் முன்னாள் சிப்பாய் கைது

கொழும்பு, செப். 16

3 இலட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் முன்னாள் இராணுவ சிப்பாய் உட்பட இருவரை தாம் கைது செய்துள்ளனர் என்று மேல் மாகாண புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தின் பல்லவெல - மிஹிது புரய மற்றும் மிதெல்லவல பகுதிகளைச் சேர்ந்த நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேல்மாகாண - கம்பஹா குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய பல்லவெல பொலிஸ் பிரிவிற்குட் பட்ட மல்லேஹேவ பகுதியில் முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது ஒன்றரை கிலோ கேரள கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. அத்துடன் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவை விற்பனைக்காக கொண்டுவரப்பட்டவை என்று அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரிய வந்தது. கஞ்சா பொதிகள் முன்னாள் சிப்பாயின் சிப்பாயின் வீட்டில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்றும் கூறப்பட்டது.

சமூகத் தொற்று இல்லாத நாடாக மாறியது இலங்கை

சுகாதார அமைச்சர் பெருமிதம்

கொழும்பு, செப். 16

நாட்டுக்குள் கொரோனா தொற்று இல்லை,100 நாட்களுக்கும் மேலாக சமூகத்தொற்று இல்லாமல் நாம் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தியுள்ளோம் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பொதுமக்கள் தொடர்ந்தும் சுகாதார ஆலோசனைகளை பின்பற்றுவதன் ஊடாகவே, கொரோனா சவாலில் இருந்து முழுமையாக வெற்றியடைய முடியும். இந்த நிலைமையை நாம் தொடர்ந்தும் பேணவேண்டும். இதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியமாகிறது. இதற்காக அரசாங்கம் எனும் வகையில், தொடர்ந்தும் பிரசாரங்களை மேற்கொண்டுதான் வருகிறோம்.

மக்கள் இதனை உணர்ந்து, உரிய சுகாதார நடவடிக்கைகளை தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கிறோம். சுகாதார ஆலோசனைகளை மக்கள் முற்றாக பின்பற்றினால்தான் இந்த சவாலில் இருந்து எம்மால் வெற்றியடைய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பான தீர்மானத்தை மேலும் வலுப்படுத்த உதவ வேண்டும்

கனடா தூதுவரிடம் சாணக்கியன் கோரிக்கை

மட்டக்களப்பு, செப். 16

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் சர்வதேசத்தின் பார்வையை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று கனடாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரா. சாணக்கியன் எம்.பி.

இலங்கைக்கான கனடா தூதுவர் டேவிட் மெக்கின்னன் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் நேற்று அவரது அலுவலகத்தில் சந்தித்தார். இதன்போது தூதுவரிடம் 3 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பான சர்வதேச பார்வையினை மேலும் வலுப்படுத்த வேண்டும்.

இலங்கை அரசாங்கத்தின் புதிய அரசமைப்பில் தமிழர்களின் பிரச்னைகளைக் கருத்திற் கொண்டு அவற்றுக்கான தீர்வுகள் உள்வாங்கப்படுவதற்காக சர்வதேச ரீதியிலான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவேண்டும்.

மற்றும் எமது பிரதேசங்களில் காணப்படும் பெண் தலைமை தாங்கும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை

மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் உள்ளிட்ட மூன்றுகோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன், பெண் தலைமை தாங்கும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் அவர்களுக்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கான திட்ட ஆவணங்களும் இதன்போது இலங்கைக்கான கனேடிய தூதுவரிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கையின் உள்நாட்டு நல்லிணக்க பொறிமுறையில் நம்பிக்கையில்லை

இலங்கையின் உள்நாட்டு நல்லிணக்க செயல்பாடுகளில் நம்பிக்கையில்லை என ஜெனீவா தீர்மானத்துக்கு பிரதான அனுசரனை வழங்கிய நாடுகள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 45அமர்வில் ஜெனீவா தீர்மானத்துக்கு பிரதான அனுசரனை வழங்கிய நாடுகள் இதனை தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் தனது உரையில் இலங்கை குறித்து வெளியிட்ட கரிசனைகளை கருத்தில் எடுத்துள்ளதாக அந்த நாடுகள் தெரிவித்துள்ளன.

கனடா ஜேர்மனி பிரித்தானியா வடக்கு மசெடோனியா மற்றும் மொன்டிநீக்ரோ ஆகிய நாடுகளின் சார்பில் உரையாற்றிய பிரிட்டனின் மனித உரிமை விவகாரங்களுக்கான தூதுவர் ரீட்டா பிரென்ஞ் இதனை தெரிவித்துள்ளார்.

அடுத்த மார்ச் அமர்வில் இலங்கை தொடர்பாக மனித உரிமை ஆணையாளர் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையை பேரவை ஆராயும் என அவர் தெரிவித்துள்ளார்.

2015 ஜெனீவா தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மனித உரிமை பேரவை ஆராயும் என ரீட்டா பிரென்ஞ் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட தீர்மானத்தின் மூலம் இலங்கை கடந்தகால காயங்களை ஆற்றுவதற்கும் மனித உரிமை ஆணையாளரினால் பதிவு செய்யப்பட்ட தீர்வு காணப்படாத பாரிய உரிமை மீறல்கள் மற்றும் துஸ்பிரயோகங்களுக்கு தீர்வை காண்பதற்குமான கருத்துடன்பாட்டுடனான கட்டமைப்பை ஜெனீவா தீர்மானம்மூலம் மனித உரிமை பேரவை உருவாக்கியது என அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட கட்டமைப்பு கருத்துடன்பாட்டுடனும் இலங்கையின் முழுமையான ஆதரவுடனும் பேரவையால் இரண்டு முறை புதுப்பிக்கப்பட்டது என ரீட்டா பிரென்ஞ் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் அந்த தீர்மானத்தை தொடர்ந்தும் ஆதரிக்கவில்லை என தெளிவாக பேரவைக்கு தெரிவித்துள்ளது என குறிப்பிட்டுள்ள ரீட்டா பிரென்ஞ் இது குறித்து ஜெனீவா தீர்மானத்துக்கு பிரதான ஆதரவை வழங்கிய நாடுகள் மீண்டும் ஏமாற்றத்தை தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் நாட்டின் பல்வேறுபட்ட சமூகத்தினர் மத்தியில் நல்லிணக்கம் சமாதான சகவாழ்வு நீதி ஆகியவற்றினை ஏற்படுத்துவதற்கான தனது தொடரும் அர்ப்பணிப்பை வெளியிட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் புதிய உள்நாட்டு பொறிமுறையொன்று இந்த நிகழ்ச்சிநிரலை முன்னெடுக்கும் என குறிப்பிட்டுள்ளது நாங்கள் இந்த அர்ப்பணிப்பை பாராட்டும் அதேவேளை கடந்தகாலங்களில் முன்னெடுக்கப்பட்ட அவ்வாறன உள்நாட்டு நடவடிக்கைகள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதல் மற்றும்உண்மையாள நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்துவதில் கவலை தரும் விதத்தில் போததான்மை கொண்டவையாக காணப்பட்டுள்ளன எனவும் ரீட்டா பிரென்ஞ் தெரிவித்துள்ளார்.

20 ஆம் திருத்தத்தை ஏற்காது விடின் நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்தலாம்

நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, செப். 16

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை நாட்டு மக்கள் எவரும் நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்தலாம். ஓர் இனத்தை இலக்காகக் கொண்டு 20 ஆவது திருத்தம் கொண்டுவரப்படவில்லை. பல்லின மக்களின் அரசியல் அபிலாஷைகளையும் கருத்திற் கொண்டு புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்று விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷதெரிவித்தார்.

இலங்கை மன்ற கல்லூரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் நாட்டுக்காக உருவாக்கப்பட்டதல்ல, அரசாங்கத்தின் தேவைக்காக அவசர அவசரமாக இயற்றப்பட்டது. இதன் பயனை மக்கள் பெற்றுக்கொள்ளவில்லை. முரண்பாடுகள் மாத்திரமே தோற்றம் பெற்றன. நாட்டுக்குப் பொருந்தும் வகையில் அரசியலமைப்பு திருத்தம் செய்யப்பட்டு, புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கினோம்.

வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு இதன் காரணமாகவே அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் ரத்து செய்யப்பட்டு 20 ஆ வது திருத்தம் கொண்டு வரப்பட்டது. வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள சட்டமூல வரைபு தொடர்பில் மாறுப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. 20 ஆவது திருத்த சட்ட வரைபை யார் தயாரித்தது என்பது தொடர்பில் ஆராய்வதற்கான அவசியம் ஏதும் கிடையாது. நாட்டு மக்கள் எவரும் 20 ஆவது திருத்தத்துக்கு எதிராக நீதிமன்றில் மனுத்தாகல் செய்யலாம் - என்றார்.

அமைச்சர் மஹிந்தானந்த குழு நேற்று கிளிநொச்சிக்கு வந்தது

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தலைமையிலான குழு நேற்று கிளிநொச்சிக்கு வந்தது.

கிளிநொச்சி இரணைமடு விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கு சென்ற மஹிந்தானந்த அழுத்கமகேயுடன் பண்ணை மேம்பாடு மற்றும் முட்டை சார்ந்த தொழில் அமைச்சர் டி. பி. ஹேரத், நெல் மற்றும் தானிய வகைகள் சேதன உணவுகள் அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, பாராளுமன்ற பிரதி குழுக்களின் தலைவரும் யாழ் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான அங்கஜன் இராமநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் திணைக்களங்கள் சார் உத்தியோகத்தர்கள் என பலரும் வந்திருந்தனர்.

இதன்போது, விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் திராட்சை உள்ளிட்ட விவசாய ஆராய்ச்சிகளை அவர்கள் பார்வையிட்டனர். குறித்த குழுவினர் அங்கு காளான் வளர்ப்பு ஆராய்ச்சிக்காக அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தினையும் திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வு இரணைமடு விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி அரசகேசரி தலைமையில் இடம்பெற்றது. இதன்போது அங்கு புதிதாக ஆராய்ச்சி செய்யப்பட்ட மரக்கன்றுகள் மற்றும் தானிய உற்பத்திகளும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டது. அவற்றையும் அவர்கள் பார்வையிட்டனர்.

இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

தமிழ் ஒளி

காலை

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஶ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்

7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை



10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

பகல்

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : சாட்சியம் (மறு ஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : டேக் இட் ஈசி
5.00 மணி : அந்த நாலு பேர்
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்

இரவு

7.00 மணி : கொஃபி வித் பிரமுகர்

8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
10.00 மணி : யாவரும் கேளீர்

DAN COMEDY HD

காலை

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

பகல்

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
சூரி நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

இரவு

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN TELEVISION HD

காலை

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

பகல்

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டூ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

இரவு

7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

காலை

5.15 மணி : தரம் 06 - கணிதம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - விஞ்ஞானம்
7.30 மணி : தரம் 09 - விஞ்ஞானம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
அரசியல் விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

பகல்

12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் வரலாறு

இரவு

7.00 மணி : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு மாதிரி வினாத்தாள்

ஞானம்

காலை

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

பகல்

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

இரவு

7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : திருவிழா - 01

CHANNEL HOLY MARY

காலை

7.00 மணி : ஆலயப் பாடலகள்
9.00 மணி : ஜெபமாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

பகல்

12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

Pirai Television

காலை

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

பகல்

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

இரவு

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.09.2020 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.